யாழ்வளாக மாணவர்கள் ஐவரின்

# மாலை

(சிறுகதைகள்)


ராஜா

மு. திருநா

வல்லை. ச. பா.

வரதன்

'அகலங்கன்'

முதற்பதிப்பு: ஒக்டோபர் 78
வெளியீடு: ஆக்கியோர்
உரிமை: ஆக்கியோருக்கே

# மாலை

(சிறுகதைகள்)

# MĀLAI

(Short Stories)

Publishers:- Moulders of Mālai

Printers:- Sivagowry, Press Kaddudai, Manipay

# மாலை

மு. இராஜரட்ணம்

மு. திருநாவுக்கரசு

ச. பாலசுப்பிரமணியம்

அ. வரதராஜன்

'அகளங்கன்'

யாழ். இளாக
சக எழுத்தாளர்களுக்கு
இது-



## சமர்ப்பணம்

உங்களுக்கு......

இம்மாலை ஐவகை நந்தவனங்களிலிருந்து பறிக்கப்பட்ட ஐவகை மணங்கமழ் மலர்களால் கோர்த்தெடுக்கப்பட்டுள்ளது. மாலை தொடுக்கப்பட வேண்டுமென்ற நிலையிற்தான் இவ்வகை மலர்கள் நாரிலே சேர்க்கப்பட்டன

யாழ்வளாகம் நாராக நாம் ஐவர் நந்தவனமாக நம் கதைகள் மலராக...... மாலை இதோ......

இது இளந்தென்றல் அணைப்பில் இன்ப நடை பயிலும் இதமூட்டும் வசந்த மாலையாகவோ அல்லது இருளென்னும் பெண்ணுளில் ஒளியூட்டும் வெண்நிலாவாகவோ இருக்கலாம். மாலையின் இதய உணர்வுகள் இரவுத் தனிமையில் ஜீரணமாகி உலகைத் திருத்த உள்ளக் கதவை உடைத்து வெளிக் கிளம்பும் காலையாகவும் அமையலாம்.

எது எப்படியாயினும் மாலைக்கும் நாளு(ரு)க்கும் உள்ள உறவுபோல வாசகனிற்கும் எழுத்தாளனுக்கும் இம்மாலை ஏற்பட்டிருக்கும்.

இம்மாலையில் கதைமலர்கள் கோர்த்த விதம் வாசத்திலோ, நிறத்திலோ எதிலும் தங்கவில்லை. திருவுளச் சீட்டு மூலம் இக்கதை ஒழுங்குபடுத்தப்பட்டு கோர்க்கப்பட்டுள்ளது.

இப்படிக்கு
மாலையின் ஐவர்.
10-10-78

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஆசைகள் நிராசைகளாகின்றன | 1 |
| 2. | மேளம் | 11 |
| 3. | அப்பாவி ஆத்துமாக்கள் | 19 |
| 4. | சேவல்களும் கோழிகளும் | 25 |
| 5. | மீண்டும் கோழையாய் | 35 |

"ஏய் ராமு! இப்பிடி கல்லு சிலையாட்டம் ஒக்காந்திருக்காம வீட்ட கவனமாப் பாத்துக்க, அடுப்புக்கிட்ட ரொட்டி சுட்டு வச்சிருக்கேன் போத்துல்ல தேத்தண்ணியை ஊத்திக்கிட்டு சரியா பத்து மணிக்கெல்லாம் மலைக்கி வந்திடு" நின்று கூற நேரமில்லாமல் தலையில் காவியேறிய துண்டை சுற்றிக் கட்டியவண்ணம் நடந்தவாறே சொல்லிக்கொண்டு போனார் ராமுவின் தகப்பன் வேலு.

அந்தத் தேயிலைத்தோட்ட லயத்தின் ஒரு கோடியிலுள்ள தன் காம்பரா வாசற் கதவில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்த

# ஆசைகள் நிராசைகளாகின்றன.........

ராஜா

ராமு தன் தகப்பனின் கட்டளைகளுக்கு எவ்வித பதிலுமே அளிக்காமல் தன் மௌனத்தை தொடர்கிறான். அவருக்குத் தெரியும், அவனிடமிருந்து பதில் வராவிட்டாலும் சரியான நேரத்திற்கு தேநீர் மலைக்கு வந்துவிடுமென்று. அதனால் அவன் பதிலை எதிர்பார்க்காமலேயே தோட்டத்துஸ்டோரை நோக்கி இறங்கும் படிவழியே இறங்கி அவன் பார்வையிலிருந்து மறைகிறார்.

சற்றுமுன் தடல்புடலாகிக் கொண்டிருந்த அந்த லயம் இப்பொழுது புகையிரதம் வந்துசென்றபின் வெறிச்சோடிக் கிடக்கும் நிலையத்தை ஒத்திருந்தது. ஒவ்வொரு காம்பராவின் முன்னும் வரிசையாகத் தொங்கிய கொழுந்து பறிக்கும் கூடைகள் ஒன்றையும் இப்பொழுது காணவில்லை.

எழுந்து முகங்கழுவிவிட்டு சாப்பிட வேண்டுமென்று ராமுவின் மனம் விழைகிறது. ஆனால் ஏதோ ஒரு இனந்தெரியாத விரக்தி, சோம்பல் மனதையும் உடலையும் ஆட்கொள்ள ஒருமுறை கைகள் இரண்டையும் முறுக்கி பெரிய கொட்

டாவி ஒல்லை விட்டுவிட்டு அந்தக் கொட்டாவியிலேயே முகங்கழுவி சாப்பிட்டுவிட்ட திருப்தியை கண்டுவிட்டவன் போல் முழங்கால்களைச் சுற்றிக் கைகளைக் கட்டியவண்ணம் மீண்டும் தன் தனி உலகமான சிந்தனை உலகத்துக்கு திரும்பி விட்டான்.

" சீ! இந்த அப்பனாலதா இன்னைக்கி ஸ்கூலுக்கு போவ முடியல்ல. நேத்தே மாஸ்டரு இன்னைக்கி எல்லாப் பொடியன்களும் கட்டாயம் ஸ்கூலுக்கு வரணும்னு சொன்னாரு...... இந்த அப்பா எப்பவும் இப்படித்தான். அக்கா காலையில போவச் சொன்னாலும் இவரு படிச்சி என்னத்த கிழிக்கப் போறாரு...... வீட்ல இருந்தாலும் வீட்டுக்கு காவலாவும் இருக்கும். மலைக்கி டயத்துக்கு தேத்தண்ணியும் வந்து சேரணு' சொல்லி ஸ்கூலுக்குப் போவ விடமாட்டாரு. அட! எனக்குமட்டும் படிக்க முடியாதா... ? அன்னைக்கி கூட அப்படித்தான் நா எல்லாக் கணக்கும் சரியா செஞ்சதப் பாத்து எங்களயெல்லாம் தோட்டக்காட்டுப் பயலுங்கன்னு பேசற அந்த வாத்தியாரே ' சபாஷ் ' னு முதுகில தட்டிக்குடுத்தாரு. நானுந்தா எவ்வளவு நாளா கேக்கிறேன்.... ஒரு புத்தகமும் சிலேட்டும் வாங்கித் தரச்சொல்லி ... சல்லி இல்ல...... சல்லி இல்லன்னு சொல்லிக்கிட்டே இருக்காரு. அந்திக்கி மட்டும் கள்ளு குடிக்க நாட்டுக்கு போயிருவாரு... சீ! இந்த லயத்த விட்டே இந்த தோட்டத்த விட்டே எங்கேனச்சும் ஓடிப்பொயிட்டா...... ஹூக்கும்... இப்பனச்சும் சாப்பாடாச்சும் கெடைக்கிது. ஓடிப்போயிட்டா எப்படிச் சாப்பிடுறதாம்... "

ராமுவின் தாய் இறந்து இரண்டு வருடங்களாகின்றது. ஒரு அண்ணனும் இரண்டு அக்காமார்களும் இருக்கின்றனர். அவனுடைய மூத்த அக்கா திருமணம் செய்து கணவனுடன் ஏற்பட்ட தகராறினால் இப்பொழுது மீண்டும் பிறந்த வீட்டிலேயே அடைக்கலமாகி குடும்பத்துக்கு தீராத சுமையாக இருக்கிறாள். ராமுவின் அண்ணனோ வீட்டுக்கும் தோட்டத்துக்கும் அடங்காத காவாலியாகி இன்னும் தோட்டத்தில் வேலை செய்ய பெயர்கூட பதியாமல் தோட்டத்தை வலம் வந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு எங்கிருந்தாவது எந்த

வழியிலாவது சூது விளையாடவும், சினிமா பார்க்கவும் சிகரெட் குடிக்கவும் பணம் வேண்டும். அதைப் பெறுவதற்கு வீட்டிலேயே திருடவும் அவன் தயங்கமாட்டான். அனேகமான நாட்களில் தோட்டத்திலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள டவுனிலேயே அவன் தங்கிவிடுவான். இவற்றுக்கெல்லாம் நேர்மாறாக ராமு அந்தக் குடும்பத்தில் பிறந்திருந்தான். இயற்கையிலேயே புத்திசாலியான ராமு தன் இளம் மனதில் தேக்கி வைத்திருந்த எதிர்காலக் கனவுகளோ ஏராளம். ஆனால் அவன் கனவுகளையும், புத்தி சாதுர்யத்தையும் அறிந்தவர்கள் அந்த வீட்டில் எவருமில்லை. ஏதோ வீட்டில் வேலையில்லாத நாட்களில் தோட்டத்துப் பள்ளிக்கூடத்துக்குப் போய்வரட்டும் என்றமட்டில் அவன் படிப்பில் அக்கறை கொண்டிருந்தனர்.

அடிவானத்திலிருந்து நன்றாக மேலே ஏறிவிட்ட சூரியன் தன் கடுமையான வெப்பக் கதிர்களை ராமுவின் உடலில் செலுத்தி அவனுக்கு நேரமாகி விட்டதை உணர்த்துகிறான்.

மீண்டும் ஒருமுறை கைகளையும், உடம்பையும் நெளித்து கொட்டாவி விட்டவண்ணம் எழுந்து அடுப்பின் அருகில் செல்கிறான். அடுப்பிலிருந்து ஒரு தணல் கட்டையை கிளறி எடுத்து அதை நீரில் நனைத்து வாயில் போட்டு மென்று பல்லை விளக்கிக் கொண்டே லயத்தில் முன்னால் நடுப்பகுதியில் இருந்த பொதுப்பைப்பை நோக்கி மெல்ல நடக்கிறான்.

பைப்படியில் ஒருவருமே இல்லை. இந்த நாட்டின் பொருளாதாரத்தை காக்க, உடலால் தொழிற்போர் புரிந்து கொண்டிருக்கும் தேயிலைத் தோட்ட போர் வீரர்களுக்கு இலவசமாக, சிறிது தாராளமாக கிடைப்பது இந்தத் தண்ணீர் ஒன்றுதான் என்பதை உலகுக்கு பறைசாற்றுவது போல் மூடப்படாத ஆனால் மூடினாலும் தொடர்ந்து அழுதுகொண்டிருக்கும் அந்தப் பைப்பிலிருந்து தண்ணீர் தன் வழியே சென்று கொண்டிருந்தது. பைப்பை அடைந்த ராமு முகங்கழுவுவதை மறந்து பைப்பை அழுத்திப்பிடித்தவண்ணம் மீண்டும் பாடசாலை பற்றிய சிந்தனைக் கடலில் மூழ்கி விட்டான்.

"இக்நேரம் மொதலாம் பாடம் முடிஞ்சி மேசமேல

இருக்கிற பணியை மாஸ்டரு அடிச்சிருப்பாரு..... இப்ப பயலுங்கல்லாம் என்னு செய்வாங்க..... ஓ ..... ஓ...... இன்னைக்கி தோட்டத்து ஸ்கூல பாக்க டவுன்லருந்து யாராரோ வருவாங்கன்னு மாஸ்டரு சொன்னாரே...... அப்படின்னா..... இந்நேரம் ஸ்கூல கூட்டித் துப்பரவு பண்ணியிருப்பாங்க...... எனக்குந்தா இன்னைக்கி ஸ்கூலுக்கு போவ முடியல. போயிருந்தா...... டவுன்லருந்து வார தொரமாரு உடுத்துனவங்க கேக்ற கேள்விக்கெல்லாம் பட்டு பட்டுன்னு பதில்சொல்லிருக்கலாம்....... அது யாரு...... இனஸ்பெக்டரோ யாரோ...... போனவாட்டி வந்திருக்கயில என்ன முதுகில தட்டிக் கெட்டிக்காரன்னாங்களே ......''

இதை நினைவு கூரும்போதில் அவன் முகத்தில் ஒரு இளம் புன்னகை தோன்றி மறைகிறது.

'' டேய்! மொகங் கழுவுறதுன்னா கழுவிக்கிட்டு பயிப்ப விடுவே ஒரேடியா ஆகாசத்த பிடிக்கிற மாரி..... நானும் தண்ணி புடிச்சிட்டுப் போவ எவ்வளவு நேரம் காத்துக் கிட்டிருக்கேன்......''

கையில் நேநீர் கேத்தலுடன் அதே லயத்தில் இன்னொரு காம்பராவில் வசிக்கும் மீனாட்சி நின்று கொண்டிருப்பதை ராமு அப்போதுதான் கவனிக்கிறான். அவசர அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு மேல்சட்டையின் கீழ்ப்புறத்தை உயர்த்தி முகத்தை துடைத்தபடியே தன் காம்பராவை நோக்கி நடக்கிறான்.

முன் வராந்தாவின் ஒரு மூலையிலிருந்து சீப்பு ஒன்றை எடுத்து தலைமயிரை வாரிக்கொண்டே உடைந்த கண்ணாடித் துண்டொன்றை எடுத்து முகத்தைப் பார்த்துக் கொள்கிறான்...... '' ம் ''...... வாஹெல்லாம் நேராத்தா வடுத்திருக்கேன். அங்காலும் இங்காலும் பிரிந்து நின்ற மயிரை ஒழுங்குபடுத்தி தலையை சிராக்கி கொள்கிறான். இந்நேரம் அடுப்பிலிருந்த நீர் கொதித்திருக்கும் என்ற நினைவு மனதில் எழ உள் அறையை நோக்கி நடக்கிறான். அந்த உள் அறையை சமயலறை என்பதா......? வரவேற்பறை என்பதா.....? அல்லது படுக்கையறை என்பதா.....? என்பதெல்லாம் பிரச்சினைக்குரிய விடயம். ஏனென்றால் தோட்டத் தொழிலாளர்களுக்கு அந்த ஒரு அறைதான் எல்லாமாக பயன்படுகிறது.

அடுத்த அறையை அடைந்த ராமு ஒரு மூலையிலிருந்த அடுப்பின் மேலிருந்த கேத்திலை இறக்கி சாயத்தை வடித்து ஒரு போத்தலில் ஊத்திக்கொண்டு தான் குடிப்பதற்கும் சிறிதை ஒரு குவளையில் ஊற்றிக் கொண்டான். பழங்கடதாசி ஒரு துண்டை மடித்து போத்தலுக்கு அடைப்பாக்கிக் கொண்டான். ஏற்கனவே சுட்டு வைக்கப்பட்டிருந்த ரொட்டிகளில் ஒன்றை தான் சாப்பிட்டுவிட்டு மற்றதை சுற்றி ஒரு துணிப்பையினுள் போட்டுக் கொள்கிறான். தேநீர் போத்தலும் அதற்குள் போயிற்று. ஒரு கடதாசியில் சீனி இறிது சுற்றி அதைக் காற்சட்டைப் பையினுள் போட்டுக் கொண்டான். ஆயிற்று எல்லாக் காரியங்களும் ஆயிற்று. இனி வீட்டைப் பூட்டிக்கொண்டு புறப்பட வேண்டியதுதான்.

வெளிக்கதவைப் பூட்டிக்கொண்டு, ரொட்டிப் பார்சல், தேநீர் போத்தல் அடங்கிய பையைத் தோளில் போட்டவண்ணம் படிவழியே இறங்கிவிட்டான். தோட்டத்து ஸ்டோர், பெரிய கணக்கப்பிள்ளை பங்களா, கொழுந்து மடுவம் என்பவற்றை அவன் கால்கள் கடந்து தன் தகப்பன் முன்னதாகச் சென்றிருக்கும் புதுக்காட்டு மலையை நோக்கி 'விசுக்' 'விசுக்' என நடைபயில்கின்றன. அவன் நடந்து செல்லும்போது எதிரே தோட்டத்து டாக்டரும் அவர் உதவியாளரும் வந்து பின் அவனை கடந்து செல்கின்றனர். இதுவரை விரைவாக நடந்து கொண்டிருந்த அவன் கால்களில் திடீரென ஒரு தளர்ச்சி ஏற்படுகின்றது. ஒரு கணம் நின்று தன்னைக் கடந்துசென்ற டாக்டரை திரும்பிப் பார்க்கிறான். அவன் கண்கள் ஏக்கத்தின் மறுபிறப்பாகின்றன.

'' அந்த சின்னாண்டு பையைத் தூக்கிக்கிட்டு என்னமா நடக்கிறாரு ..... நானும் படிச்சி பெரிய மனிசனாயி டாக்டரா வரணும். இந்த வருஷத்தோட டவுன் ஸ்கூலுக்கு போயிட்டா ..... இப்பகூட நெறைய தோட்டத்துப் பயலுங்க டவுன் ஸ்கூலுக்கு போறாங்கே. அப்பாகிட்ட சொல்லி ஒரு பஸ் சீசன் டிக்கட் வாங்கிட்டா ..... காலயில ஏழரமணி பஸ்ஸுக்கு ஏறிடலாம் ..... '' தான் புத்தகக் கட்டை சுமந்து கொண்டு மற்ற பையன்களுடன் முண்டியடித்துக் கொண்டு ஏறி கண்டக்டரைப் பார்த்து '' சீசன் '' என்று சொல்கிற காட்சியை அவன் மனம் கற்பனையில் கண்டு இரசித்தது.

'' எப்படியும் டவுன் ஸ்கூலுக்கு போயிட்டா அப்புறம் நெறைய வேல இருக்கும். ராத்திரி ரொம்ப நேரம் படிக்க ணும்...... சீ... வீட்ல நல்ல வெளக்கு கூட இல்ல.. ... அதுக் கென்ன...... வாத்தியாரு அன்னைக்கி கூட சொன்னரே.... யாரோத்தான் அது...... தெருவெளக்கில படிச்சி பெரிய மனுசனு போனாராமே...... அதுமாரி நானும் ஸ்டோர்லைட் வெளிச்சத்தில போயி படிப்பேன்...... படிச்சி லோங்ஸ் போட்டு கண்ணாடி போட்டு டாக்டர் மாரி கையில் பை தூக்கிட்டு நடக்கணும் ''

ரொட்டிப் பார்சல், தேநீர் போத்தல் அடங்கிய பையை தோட்டத்து டாக்டர் வைத்திருந்த பையாக உருவ கித்துக் கொண்டு சிறிது தூரம் மிடுக்காக நடந்து பார்க்கி றான். அவனுக்கே சிரிப்பு வந்து விட்டது. தன்னை யாரும் பார்க்கிறார்களாவென சுற்றி ஒருமுறை பார்த்துக் கொண் டான். '' நல்ல வேள...... ஒருத்தரையும் காணம். இல் லாட்டி பைத்தியம்னு நெனச்சிக்குவாங்க...... ''

'' நேத்து கூட அக்காகிட்ட அப்பா என்னமோ சொல் லிக்கிட்டு இருந்திச்சே...... ம் ...... என்னபத்திதான்...... டவுனுக்கு அனுப்பனும்னு. செலசமயம் இப்பவே டவுன் ஸ்கூல்ல சேக்கப்போவுதோ ... ? அப்பா என்னே பேசினு லும் எனக்குத் தெரியும். என்ன டவுன் ஸ்கூல்ல சேக்க யார் கிட்டயாவது கையகால புடிச்சி சொல்லிருக்கும் போல...... அப்பிடியில்லாட்டி டவுன்லருந்து என்னெ கூட்டிட்டுப்போக ஆளு வருமா...... '' அவன் முகத்தில் ஒரு கேள்விக் குறி தோன்றி மறைந்து பின்னர் வியப்பு படர்கிறது.

'' அடேப்பா டவுன் ஸ்கூல் தோட்டத்துஸ்கூல் மாரியா இருக்கும்...... டவுன்ல படிக்கிற தோட்டத்து பயலுங்க சொல்லுவாங்களே...... பெரிசு பெரிசா கட்டிடமெல்லா இருக்காமே......, அப்பாகிட்ட சொல்லிடனும் அங்க போன பொறகு கொப்பி புஸ்தவம் பென்சிலெல்லாம் ஒழுங்கா வாங்கிக் குடுத்தறனும்னு .... இதுகமாரி ஒன்னுமில்லாம அங்கயெல்லாம் போவலாமா......? டவுன் பாடசாலையின் நினைப்பு அவனை ஆனந்தக்கடலில் அழுத்திக் கொண்டிருந் தது இன்றைக்கு எப்படியாவது தன் தகப்பனிடம் தீர்க்க

மாக கேட்டுக் கொள்ள வேண்டுமென முடிவு செய்து கொண்டான்.

"ராமு!...... என்ரா நா நிக்கிறது கூடத்தெரியாம அப்பிடி யோசிச்சிக்கினு வர்ற ..... தோ...... நா இங்க நிக்கிறேன். அப்பிடியே சுத்தி சுருக்கினே வா......"

தன் தந்தையின் குரல் வெகு அருகில் கேட்டு சிந்தனை கலைந்த ராமு அப்பொழுது தான் தான் வரவேண்டிய இடத்திற்கு வந்து விட்டதை உணர்கிறான்.

தகப்பனும், மகனுமாக ஒருவகை மரத்தடியில் உட்கார்ந்து கொள்கிறார்கள். மற்றத் தொழிலாளர்களும் அங்கங்கே நிழலான இடங்களில் அமர்ந்து தேநீர் அருந்திக் கொண்டிருக்கின்றனர். ராமு துணிப்பையிலிருந்து ரொட்டிப் பார்சல், தேநீர் போத்தல் என்பவற்றையும் காற்சட்டைப் பையிலிருந்து சீனிப் பார்சலையும் எடுத்து வெளியே வைக்கிறான். டவுன் ஸ்கூலுக்கு போகும் விஷயத்தை கேட்டறிந்து கொள்ள அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

"அப்போவ்......"

ரொட்டியைப் பிய்த்து சீனியில் தொட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்த ராமுவின் தந்தையின் காதுகளில் மகனின் குரல் விழவில்லை.

"அப்போவ்...... "

இம்முறை சிறிது உரக்கவே கூப்பிட்டான்.

"என்ரா......?"

என்ன டவுனுக்கு எப்ப அனுப்பப் போற......? அவன் மனதின் ஆர்வமெல்லாம் திரண்டு குரலில் தொனிக்கிறது.

ஹாம்..... அவன் மனதில் ஆர்வத் தொனிக்கும் கேள்வி அவர் மனதில் எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. பனிரெண்டு மணிக்குள் மிகுதியிருந்த முள்ளறுத்தலையும் முடிப்பது எப்படியென அவர் மனம் அலைபாய்ந்து கொண்டிருந்தது. கடைசித் துண்டு ரொட்டியையும் வாயில் போட்டுக்கொண்டு மிதமிருந்த சீனியை இடது உள்ளங்கையில் கொட்டி நக்கியவாறே தேநீர் அருந்தத் தொடங்குகிறார்.

"எப்பப்பா அனுப்பப்போற ...?" ராமுவும் விட்டபாடில்லை.

"அட.. என்னடா நீ தொணதொணன்னுக்கிட்டு..

நாளக்கி இல்லாட்டி நாளன்னிக்கு டவுன்லருந்து ஆளு வரும் அப்பத்தான்...... சரி...... சரி கணக்கப்புள்ள வந்திடுவாரு போத்தலையும் பையையும் எடுத்துக்கினு சுருக்கா வீட்டுக்கு ஓடு ....'' இனி ஒன்றுமே கேட்கமுடியாது என்பதை உணர்ந்தவது போல் எழுந்து முள்ளை கையில் எடுத்துவிட்டார்.

இதை உணர்ந்து கொண்ட ராமு தான் இன்னும் இரண்டே நாளில் டவுனுக்குப் போகும் விடயத்தை லயத்தில் மற்ற பையன்களுக்கு சொல்ல வேண்டுமென்பதை நினைத்து சந்தோஷம் ஆணைமீற விசில் அடித்துக் கொண்டே லயத்தை நோக்கி ஓடுகிறான்.

* * *

அடுத்த இரண்டு நாட்களை தன் கனவுலகில் பறந்து சிட்டாகக் கழித்தான். மூன்றாம் நாள் மாலை ராமுவை அழைத்துக்கொண்டு வரும்படி பெரிய டீமேக்கர் வீட்டிலிருந்து ராமுவின் தந்தைக்கு அழைப்பு வந்திருந்தது. தன் உடைமைகள் சகிதம் ராமு வீட்டை விட்டு தன் தந்தையுடன் பெரிய டீமேக்கர் வீட்டுக்கு புறப்பட்டபோது ராமுவின் தமக்கைமார் இருவரும் அழுதுகொண்டே '' நல்ல புள்ளயா கவலையா இருந்து நல்ல பேரெடுக்கணும் '' என்று சொன்னார்கள். '' அட இந்த பொம்பளைங்களே இப்பிடித்தான்...... எல்லாத்துக்கும் அழுவாங்க...... படிக்க அனுப்பறத்துக்கும் அழுவனுமாக்கும்......'' ராமு மனதில் நினைத்துக்கொண்டாலும் பிறந்ததுமுதல் பிரிவை அறியாத ராமுவையும் இந்த சிறு பிரிவுத் துயர் வாட்டத்தான் செய்தது.

பெரிய டீமேக்கர் வீட்டை அடைந்தபோது அங்கு பெரிய டீமேக்கருடன் லோங்ஸ் அணிந்த இன்னுமொரு புதிய மனிதரும் அமர்ந்திருந்தார். '' இவரு தா டவுன்லருந்து வந்திருக்கணும்......'' தங்களுக்கு உதவி செய்ய வந்த அவர்மேல் ராமுவுக்கு ஒரு இனந்தெரியா மரியாதை ஏற்பட்டது.

ராமுவின் தந்தை தோளில் கிடந்த துண்டை எடுத்து கக்கத்தில் இடுக்கிய வண்ணம் புதியவரைப் பார்த்து

'' இவந்தானுங்க நம்ப மகென்...... பய ரொம்பக் கெட்டிக்காரனுங்க. எங்க போதாத காலம்...... இப்பிடி அனுப்பறம் '' என்று கூறிவிட்டு ராமுவின் பக்கம் திரும்பி,

"ராமு! ஐயா கூட டவுன்ல அவரு வீட்டுக்குப் போயி ஒழுங்கா நல்லபுள்ளயா இருக்கனும்...... நீ ஒழுங்கா இருந்து ஐயாவுக்கு புடிச்சிப் போச்சுன்னு பெரியவனானதும் ஒன்ன டவுன்லேயே எங்கேனுச்சும் கட கன்னிலே சேத்துடுவாரு. ஒன்ன நாங்க அனுப்பமாட்டோம்..... எங்க கூட நீயும் கஷ்டப்படாம நீயாவது நல்லா சாப்பிட்டு நல்ல நெலக்கி வரனும்னு தா அனுப்புறோம்."

இதை சொல்லி முடித்தபோது அவர் கண்களில் நீர் நிறைந்துவிட்டது.

"நீ பயப்பிடாத..... அங்க அவனுக்கு ஒன்னும் கஷ்டமான வேலையில்ல..... மாதாமாதம் சரியா காசு அனுப்பிடுவாரு..... நீ வந்து எங்கிட்ட வாங்கிக்கலாம்...... அங்க போய் அடிக்கடி தொந்தரவு பண்ணக் கூடாது. என்று ராமுவின் தந்தையிடம் கூறிய டீமேக்கர் புதியவரின் பக்கம் திரும்பி "மிஸ்டர் பெரேரா! வீ ஆ கெட்டிங் லேட் போர் த பஸ். லெட் அஸ் கோ டவுன்." என்றவாறு அவரை பயணப்படுத்தினர்.

ராமுவுக்கு சிறிது நேரம் ஒன்றுமே புரியவில்லை. சிறிது சிந்தித்தபோது ஏதேதோ விடயங்கள் படிப்படியாக புரிந்து கொண்டு வந்தது. இது போன்று முன்பும் பல தோட்டத்து பையன்கள் தோட்ட உத்தியோகத்தர்களான அடிமை வியாபாரத் தரகர்கள் மூலம் டவுனுக்கு வேலைக்காரப் பையன்களாக அனுப்பப்பட்டிருப்பதை அறிந்திருக்கிறான். தானும் அதற்குப் பலியாக்கப் பட்டிருக்கும் நிகழ்ச்சியை அவனால் ஜீரணிக்க முடியாமல் இருந்தது. தான் வீட்டைவிட்டு புறப்பட்டபோது தன் தமக்கையார் அழுதுகொண்டே வழியனுப்பிய தன் இரகசியம் இப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது.

ஒரு மலை உச்சியிலிருந்து பலர் சேர்ந்து தன்னை தள்ள முயற்சிப்பது போன்று ஒரு உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. அந்தக் கரங்களுள் அவன் தந்தையின் கரங்களும் சேர்ந்துள்ளதே..... அப்படியென்றால் அவன் கனவுகள் இலட்சியங்கள் ஆசைகள் அவை காற்றோடு காற்றாக கலந்தவை தானோ.....? அவற்றிற்கு சாவுமணி இதன்மூலம் அடிக்கப்படுகிறதா......?

ராமு நிலை குலைந்தான். இந்தக் கூட்டத்தை விட்டு, இங்

தத் தோட்டத்தை விட்டு, இந்த சமுகத்தை விட்டு கண் காணாத இடத்திற்கு ஓடிவிடலாமா.....? என்று யோசித்தான். ஆனால் அவனிடம் அளவுக்குமீறி இருந்த சிந்தனைசக்தியும், குடும்பத்தின் வறுமையும் அப்போதைக்கு எந்தவித குழப்பமும் செய்யவிடாமல் தடுத்தது. தன் ஆசை, ஆர்வம், ஏமாற்றம் எல்லாவற்றையும் மனதுக்குள்ளேயே புதைத்துக் கொண்டு ஒரு ஞானியைப்போல் மௌனமாக புதியவரை தொடர்ந்தான் ராமு. அவன் மனதிலுள் இதற்கொரு மாற்று முடிவை சிந்திக்கின்றானே.....!!

இதோ! ஐந்தரை மணிக்கு டவுனுக்கு செல்லும் பஸ் வந்து விட்டது. கண்ணில் நீர் மல்க நிற்கும் தன் தந்தையை ஒருமுறை பார்த்துவிட்டு அந்த புதியவருடன் தன் உடமைகளையெல்லாம் ஒரு கடதாசிப் பையினுள் அடக்கியவனாய் பஸ்ஸினுள் ஏறுகிறான் ராமு. புத்தகப்பையை ஒரு கையில் அணைத்துக் கொண்டு பஸ்ஸினுள் முண்டியடித்து ஏறிவிட்டதாக ஒரு நினைப்பு அவனுக்கு.

(யாவும் கற்பனை)

---

இலக்கியம் என்பது தொலை தூர நட்சத்திரமொன்றை தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்ப்பது போன்ற ஒரு செயலல்ல. ஆனால் எம்மைச் சுற்றியுள்ள சகல மட்டத்து மக்களினதும் ஆசாபாசங்களை, பிரச்சினைகளை, உணர்வுகளை, உள்ள வெளிப்பாடுகளை எழுத்தாளன் தன் ஆழ்ந்த பார்வையால் ஊடுருவிப் பார்க்கும்போது தான் இலக்கியம் உருவாகிறது.

ராஜா

---

# மேளம்

— மு. இருநா. —

என் சயிக்கிளின் சக்கரங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. பக்கமாகத் திரும்பிப் பார்க்கிறேன். பாலசிங்கத்தின் வீட்டில் பொலீஸ்வாகனம். பாலசிங்கமும் பொலீஸ் அதிகாரியும் கைகுலுக்கி மகிழ்கின்றனர். திருமதி பாலசிங்கத்தின் முகத்தில் சிரிப்பும் அதேவேளை ஒருவகை ஆத்திரமும் தெரிகின்றது. இவர்களின் மத்தியில் கண்ணம்மா வாடிச் சோர்ந்தவளாய்த் துன்பம் ததும்ப தனக்கே உரிய சட்டையுடன் காணப்படுகிறாள்.

ஒகோ......! ஏதோ விபரீதம் நிகழ்ந்து விட்டது. அதுவும் கண்ணம்மாவிற்குத்தான் நடந்திருக்கிறது. என்ன? ஏன்? எப்படி? நிகழ்ந்திருக்குமென்று எண்ணியவாறு சுற்றும் முற்றும் பார்க்கிறேன். பலரிடமும் அறிய முயல்கிறேன். ஆனால் முடியவில்லை. என் சயிக்கிளின் சக்கரங்கள் சுழரத் தொடங்குகின்றன. என் மனமும் பல்கோணமும் சுழன்று மூலை முடுக்கெல்லாம் சென்று வருகின்றது.

கண்ணம்மாவின் மீது திருட்டுக் குற்றம் சுமத்தியுள்ளார்களோ......? அல்லது அவள்மீது யாரும் பலாத்காரம் புரிந்து விட்டார்களோ......? ஒருவேளை ஏதாவது ஆசைவார்த்தை சொல்லி ஏமாற்றி அவள் வயிற்றில் சுமையை ஏற்றியிருப் பார்களோ......? இருக்காது. அப்படிக் கண்ணம்மா யாரோடாவது தொடர்பு வைத்திருந்தால் எனக்கு நிட்சயம் சொல்லியிருப்பாள். என்ன நடந்திருக்குமென்று ஊகிக்கவே முடியவில்லையே. என்னதான் நடந்திருந்தாலும் அது கண்ணம்மாவிற்குப் பாதகமாகத்தான் நடந்திருக்கும். கண்ணம்மாவிற்கு இயற்கையாக ஏதாவது துன்பங்கள் ஏற்பட்டாலும் சரி அல்லது வேறு வகையில் ஏதாவது விபரீதங்கள் ஏற்பட்டாலும் சரி அவளிற்காக இரங்கி எந்தப் பரிகாரத்திலும் ஈடுபடமாட்டார்கள். மாறாக ஏதாவது பரிகாரத்தில் ஈடுபடாது விட்டால் தம்மைப் பாதிக்கும் என்கின்ற கட்டத்திற்

தான் ஏதாவது பரிகாரம் செய்வார்கள். பாவம் கண்ணம்மா. அவளிற்கு எத்தகைய துன்பம் ஏற்பட்டிருந்தாலும் அவள் மீது அன்புபாராட்டவோ ஆதரவுகாட்டவோ மாட்டார்கள். பதிலாகத் தமக்குச் சிரமமாக இருக்கின்றதேயென்று சினப்பார்கள். அவளிற்கு ஆறுதல் சொல்ல யார் தானுண்டு அவளிற்குத்தான் ஒரு சினேகிதி கூட இல்லையே. தன் கஸ்டங்களை என்னிடம் தான் மனம்விட்டுப் பேசுவாள் இவ்வாறே எண்ணிய நான் ஒரு முடிவும் காட்டமுடியாமல் எதற்கும் நாளை காலை அவளைச் சந்திக்கலாமென்ற எண்ணத்துடன் மாட்டிற்கு வைக்கோல் வாங்குகிறேன்.

❁ ❁ ❁

வெட்டுவாயில் இரத்தம் வடியாத கொலைச் செய்தி சொல்லச் செங்கதிர் என்னைத் தட்டி எழுப்புகிறது. தன் மேன்மைமிகு செந்நிறத்தின் ஆதரவு காட்டி வடியாத இரத்தத்திற்குப் பதிலாய் சூரியன் புவியெங்கும் செந்நிறம் பரப்புகின்றது. வழக்கம்போல கண்ணம்மா பால் வாங்க வருகிருள். முழந் தாழிற்குக் கீழ் நீண்ட அகண்ட சட்டை. நடையில் ஓர் விரக்தியும் வாட்டமும் தெரிகிறது. கைகள் பாலை அளப்பதற்குப் பதிலாக என் கண்கள் அவளது நிலையை அளக்கின்றன. கண்கட்குத் துணையாக வாய் " கண்ணம்மா நேற்று என்ன...... என்று ஆரம்பிக்கும்போதே அவள் தன் கைகளைத் தலையின் பின்புறமாக அழுத்தி முன்புறமாக இழுக்கிருள்......

எனது கேள்வி முடியுமுன்பே விடை முடிந்து விட்டது. எனது கண்கள் அவள் காட்டிய பகுதியையும் அவள் முகத்தையும் மாறிமாறிப் பார்க்கின்றன. அவள் என் கேள்விக்கு ஒன்றொரு வார்த்தையாலும் பதிலளிக்காது முழு உடலாலும் பதிலளிக்கின்ருள். மொழிகூட அவளது உணர்வை வெளிப்படுத்த முடியாது தோல்வி கண்டுவிட்டது. அவளின் இதழ்களின் துடிப்பும் இமைகளின் அசைவற்ற அமைதியும் மொத்தத்தில் அவளது உடலின் சகல அசைவும் அசையாமையும் நிகழ்ந்த விபரீதத்தை எனது உடலின்சகல துவாரங்கட்கூடாகவும் உட்புகுத்த அவை மூளையைச் சென்றடைந்து தேங்க வேண்டியவை மூளையுட் தேங்க பிறிய உணர்வு மட்டும் கண்களுக்கூடாய் வெளியேறுகின்றது.

கண்ணம்மாவிற்கு நான் எந்த வித உதவியும் செய்த இல்லை. ஆனால் அவளை நான் 'தங்கச்சி' என்றழைக்கும் ஓர் வார்த்தைக்காக என்னை மிகவும் நேசிக்கின்றாள். என்னிடம் அவளே இதனை ஒருநாட் சொல்லி உருகி நின்ற சம்பவம் என் மனதை இப்போது சேற்றில் கிடந்து துடிக்கும் மீனைக துடிக்க வைக்கிறது. இந்நிலையில் அவள் என்னிடம் எதனையுமே சொல்லுவாள். அவள் சொன்னதை வைத்துக் கொண்டு நேற்று விபரீதத்திற்குட்பட்ட பகுதிமீது அவளிற்கு நேசிக்கும் மனோநிலை ஏற்பட்ட சம்பவத்தை எண்ணிப் பார்க்கிறேன்.

அன்று உள்ளங்கியணியாத மிக இறுக்கமான மேற்சட்டையையும் முழந்தாழ்வரை நீண்ட பாவாடையையும் கண்ணம்மா அணிந்திருந்தாள். அச்சட்டையின் கொலர் பிடியிலிருந்து மார்பகத்தின் பகுதிகள் பிறி வெளியே பாய்வது வழக்கம். இவ்வாடை அவளது அழகையும் பண்பையும் மிளிர வைப்பதற்குப் பதிலாக அருவருக்கத்தக்க வெறும் பச்சைப் பாலியல் உணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதான தன்மையது. இவ்வாடையுடன் A|L படிக்கும் அவள் வயதையொத்த சுபாவிற்கு ரீ கொண்டு செல்கிறாள். அப்போது சுபா மக்சி (Maxi) அணிந்தவண்ணம் தனது இரட்டைப் பின்னலைச் சரிபார்த்துக் கொண்டு கண்ணாடிக்கு முன் நிற்கிறாள். இந்தவேளை கண்ணம்மா தனது ஆடையையும் சுபாவின் ஆடைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கிறாள். தான் அணியும் உடலின் எப்பகுதிக்கும் பொருத்தமில்லாத நெடுஞ்சட்டையையும் சுபா அணியும் மிடி (Midi) ஃபிறொக் (Frock) சிவ்ற் (Shift) டிவைடெட் ஸ்கேட் (Divided Skirt) பெல்பொற்றம் (Belbottom) போன்ற ஆடைகளை எண்ணிப் பார்க்கிறாள். வேலைக்காரியென்று எழுதி ஒட்டி விட்டாற்போல வீஷேச சின்னமாய் அமைந்திருக்கும் தன் ஆடைகளை எண்ணி வேதனைப்படுவதைத் தவிர அவளால் வேறொன்றும் செய்ய முடிந்ததில்லை. இவ்வாறு வேலைக்காரியென்று சின்னமிட்டுக் காட்டுவது கூலிக்குமேலால் வீட்டாரிற்கு ஓர் கௌரவத்தை தேடிக் கொடுப்பதுமாகும்.

கண்ணம்மா இதனை எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருக்கையிற்தான் சுபா தன் இரட்டைப் பின்னலித் திருப்பி

யில்லாமல் குலேத்து ஒற்றைப் பின்னல் பின்னுவதைக் காணும்போது அவளிற்கோர் புதிய திருப்தியொன்று பிறக்கின்றது. தான் படிக்க வசதியில்லாமைக்காகக் கவலைப்படுவதும், தன் வயதை ஒத்தவர்கள் விழாக்கள் படங்கள் என்பவற்றைப் பார்த்து மகிழும் வேளை தான்மட்டும் அதனை அனுபவிக்க முடியாத சூழ்நிலையில் அவர்களின் பிள்ளையைக் காவிக்கொண்டு அவர்களின்பின்னால் விழாக்களிலோ படம் பார்க்கையிலோ செல்வதையும் படம் பார்ப்பதற்குப் பதிலாய் தான் பிள்ளையைப் பார்க்க வேண்டி நிலையையும் எண்ணி வேதனைப்படுமவள் ஏதோ ஓர் வகையான புதிய திருப்தி நிலைக்குத் தன்னை ஆக்குகிறாள்.

இயற்கையிலேயே வளமான கூந்தலில்லாத சுபா செயற்கையிலே அதனை அழகுபடுத்தப்படும் பாட்டினை எண்ணுகிறாள். தனது அழகுள்ள இயற்கையான கூந்தலைத் தடவிப் பார்க்கிறாள். அம்மாக் கொண்டையாகக் கட்டியிருந்த தனது கூந்தலை அவிழ்த்து தனது மார்பகத்துடன் அணைத்து வருடுகிறாள். அன்றிலிருந்து அவளிற்கந்தக் கூந்தல் சினேகிதியாய் ஆறுதலளிக்கும் ஆசானாய் மாறுகின்றது. இயற்கையாகக் கிடைத்த ஓர் சிறப்பானது தன்னிடத்திலுண்டு என்ற மகிழ்ச்சியில் அன்று முழுவதும் பசியே இல்லாதவாறு மகிழ்ச்சியே உணவாக அமைந்து விடுகிறது.

சுபா போடும் Bound (பண்ட்) லோபண் (Low Bound) டபிள் டண்ட் (Double Bound) ஒற்றை, இரட்டைப் பின்னல் டஞ் ஓவ் கேல்ஸ் (Bunch of Curls) ஸ்குகிள்ஸ் (Squiggles) போன்ற கொண்டை வேலைப்பாடுகளை அன்றிலிருந்து மிகக் கூர்மையாக அவதானிப்பாள். படுக்கைக்குப் போகும் போது இவற்றுட் சாத்தியமான சில கொண்டைகளைப் போட்டுப் பார்ப்பாள் கண்ணம்மாவின் கொண்டைகளைக் கண்ணுற்ற இருள் தான் இரசிப்பது வழக்கம். காலை எழுந்தவுடன் அம்மாக் கொண்டையுடன் பால் வாங்க வருவாள். அவளின் மனமகிழ்ச்சிக்காக சாத்தியமான வேளைகளில் அவளின் கூந்தலை மெச்சுவேன். அப்போது கண்ணம்மாவின் மகிழ்ச்சியையும் எனக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையில் என்னை அவள் பார்க்கின்ற பார்வையையும் எந்தக் கவிஞனாலும் வர்ணிக்கவே முடியாது. அந்த உணர்விற்காக உழைக்

கின்றாளோ அந்த உணவைக் கூட மற்றவர்களைப்போல கூடியிருந்து மகிழ்ந்துண்ண முடியாதவாறு வீட்டார் உண்டு முடிந்த பின்பே தனித்தொருபுறமிருந்து உண்ணும் கண்ணம்மாவிற்கு கூந்தலின் அழகையாவது ஒருவருடன் சேர்ந்து பேசிக் கொள்ளும்போது அதுவும் ஆடவன் ஒருவனாற் பாராட்டப்படும்போது அவளின் இன்பத்தின் உச்சநிலையைச் சொல்ல முடியாதுதான்.

இப்படி அவளின் உணர்வையெல்லாம் நான் எண்ணி விழிக்கும்போது அன்று தனக்கு அந்த விபரீதம் நடந்த முறையைக் கடகடவென்று சொல்லிவிட்டு விரைவாக ஓடுகிறாள். தண்ணீருக்கடியிலிருக்கும் தவளை மூச்சு விடுவதற்காகத் தண்ணீரிற்கு மேல்வந்து மூச்சுவிட்டிட்டுப் போவதுபோல கண்ணம்மா என்னிடம் சொல்லிவிட்டுப் போகிறாள். கிணற்றுத் தவளை மூச்சுவிட ஒரு கணப்பொழுது தண்ணீரிற்கு மேலே வந்தாலும் தண்ணீருக்கடியே போகவேண்டியது எவ்வாறு தவிர்க்க முடியாத உயிரியல் நிற்பந்தமோ அவ்வாறே கண்ணம்மாவின் நிலையும்.

சயிக்கிள் சக்கரத்துடன் எண்ணச் சக்கரமும் சுழரத் தொடங்குகிறது. கொடிய கிணற்று மலையிடிந்து கண்ணம்மாத் தவளைமீது விழ்ந்தபோது அவள் பட்டபாட்டை என் மனக்கண் முன் மீண்டும் மீண்டும் எண்ணிப்பார்க்கிறேன்...... அன்று பாடசாலையில்லாத சனிக்கிழமையென்பதால் தன் சகோதரனுடன் காரிற் சென்று காலை 10-30 மணிப் படக்காட்சி பார்த்துவிட்டு வந்த சுபா மாலை தனக்கு ரியூசன் வகுப்புமில்லையென்றெண்ணிக்கொண்டு கண்ணாடியின் முன் நின்று தனது ஸ்குகில்ஸ் (Squiggles) கொண்டையை அவிழ்த்து கூந்தல் வளரும் ஒருவகை எண்ணெயைப் பூசிக்கொண்டிருக்கின்றாள், அவ்வேளை கண்ணம்மா மத்தியான உணவையெல்லாம் மேசையில் ஆயித்தமாய் வைத்துவிட்டு வந்துகொண்டிருக்கிறாள். சுபா எண்ணெய்பூசுவதைக் கண்டபோது அந்த எண்ணெயைத் தனது கூந்தலிற்கும் பூசினால்...... என்றெண்ணியவாறு சுபாவிடம் கேட்கவா? கேட்டாற் தருவாளா? சில வேளை அவள் பேசினால்...... பேசினாற் பேசட்டும். நித்தமும் பேச்சு வாங்கியே மரத்துப்போன எனக்கு இது ஏதோ

பெரிய பேச்சாகவா இருக்கப்போகிறது என்றெண்ணிய வண்ணம் சுபாவை நோக்கி நடக்கிறான்.

உள்ளம் குழைந்துகூனியதால் அவள் உடலும் குழைந்து கூனியபடி சுபாவின் பக்கம் நெருங்கிறாள். என்னடி வேண்டுமென்ற பாங்கில் சுபா கண்ணம்மாவை நிமிர்ந்து பார்க்கிறாள், அவள் தன் தலையை ஒருபுறம் சரித்த வண்ணம் கண்களைச் சுழித்துப் பிடித்தபடி பார்க்கும் பார்வையில் தான் மேலானவள் என்ற செட்டு அப்படியே தொனிக்கிறது. கேட்கத் துணிந்தபோதிலும் தயக்கமும் பதட்டமும் அவள் நாவைப் பேசவிடாது தடுத்து விடுகிறது. கையால் கையால் எண்ணெய்ப் போத்தலைச் சுட்டிக்காட்டி அதே பக்கம் தலையைச் சாய்த்து தன் எண்ணத்தையும் பணிவையும் காட்டுகின்ற பாங்கில் இதழைத் திறந்து முழுப் பல்லையும் காட்டுகிறாள். சுபா அசட்டுத்தனமாகத் தலையை ஆட்டுகிறாள். அவள் தலையை அசைத்த மகிழ்ச்சியில் கண்ணம்மாவிற்கு அவள் மேல் பக்தி ஏற்படுகிறது. பக்தியுடன் பயம் கலந்தவாறு போத்தலை தூக்கி மிகச் சிறிதளவு எண்ணெயைத்தான் உள்ளம் கையில் ஊற்றுகிறாள், மகிழ்ச்சி அவள் உடல் முழுவதையும் உலுக்க பக்தி அவளைக் காற்றிற் தூக்க தன்னை மறக்கிறாள்.

ஏணையிலிருந்து குழந்தையைத் தூக்குவது போல கண்ணம்மா தன் கூந்தலை அணைத்தெடுக்கிறாள், பால்வேதனை கொள்ளும் தாய் தன் பிள்ளைக்குப் பாலூட்ட முனையும் ஆர்வமும் அதேவேளை பிள்ளையைப் பக்குவமாகவும் பாசத்தோடும் அணைத்துப் பாலூட்டுவது போலவும் தனது மார்பகத்துடன் கூந்தலை அணைத்து எண்ணெய் பூசுகிறாள்,

பால்வேதனை குறையும்போது வளர்ந்து செல்லும் சுகமும் அதேவேளை மென்மையான மார்பகத்தை குழந்தை கையால் அளைந்து சுருத்து நாவால் உந்தி பாலாற் குதப்பி பசும் இதழால் உமிழும்போது உருவாகும் இனம்புரியாத இதத்தாலும் குழந்தை மீது அன்புவகை பொங்க உச்சி மோர்ந்து வருடுவது போலத்தான் அவள் கூந்தலை வருடி எண்ணெய் பூசும் உவகை மலர்கிறது.

எண்ணெய் பூசிய மகிழ்வில் அவள் ஒருபுறமாக இருந்து தலைவாரிக் கொண்டிருக்கிறாள், சுபாவும் அவள் சகோதரனும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுபாவின் தாய் சாப்பாட்டு மேசையை நோக்கி நடந்து கொண்டிருக்கிறாள். அப்போது சுபாவின் சகோதரன் "சீ சோறெல்லாம் ஒரே மயிர்" என்று சினந்து கோப்பையைத் தள்ளுகிறான். அப்போது பருந்துக்கஞ்சிக் கூவும் குரல் கேட்டு மேயும் கோழிக்குஞ்சு திகைத்துத் திரும்புவது போல கண்ணம்மா திகைத்துத் திரும்புகிறாள். அவளின் தாய் பாக்கியம் பருந்துக் கண்களால் கண்ணம்மாவைப் பார்த்தவாறு "அவளிற்கு எந்தநேரமும் மயிரின்ர எண்ணைத்தானே ஒழுங்காய் வேலையும் செய்கிறாளில்லை" என்று கூறிக்கொண்டு திரும்புகிறாள். மேசையில் அவள் அப்போது தான் துணி வெட்டிவிட்டு வைத்திருந்த கத்தரிக்கோல் வாயைப் பிழந்தபடி கிடக்கின்றது. கண்ணம்மா முழந்தாழ்க்குத்தில் பின்னேக்கி மடித்திருந்த இடக் கையை விட்டு எழும்புகிறாள். அடிமரத்துள் பதுங்கும் கோழிக்குஞ்சு போல அவள் சுவரோடு கோர்ணி ஒதுங்குகிறாள். பாக்கியம் கூந்தலைப் பற்றுகிறாள். வெட்டமாட்டாள் சும்மா வெருட்டுகிறாள் என்றெண்ணிக் கூசிக் குனிகிறாள். கறுக்கு...... கறுக்கு...... கறுக்கு...... அவளின் பின்னலை அவளெதிரே அறுத்துக் கொள்வது போன்ற உணர்வில் துடிக்கிறாள். கூந்தலை அறை முழுவதும் மின்விசிறி பரப்புகின்றது. கண்ணம்மா சுபாவைத்தான் நிமிர்ந்து பார்க்கிறாள். அவள் இயந்திரம்போல தன்கை கழுவிக் கொண்டிருக்கிறாள். கூந்தலை மின்விசிறி அறை முழுவதும் பரப்பிக்கொண்டே இருக்கிறது......

என் கண்களைப் பித்துக்கொண்டு ஓர் காட்சி வெளியே வருகிறது. அன்று தைப்பொங்கல் தினம் சுமாராக எனக்கு 50 யார் தூரத்துக்கப்பால் புக்கைப் பாசலுடன் கண்ணம்மா நடந்து செல்கிறாள். அள்ளிமுடியாது அப்படியே சொரிந்த வண்ணம் கிடக்கிறது அவள் கூந்தல். தூரத்திலிருந்து பார்க்கும்போது மலை உச்சியிலிருந்து ஆறு அசைந்து வளைந்து வளிவதுபோல அவளின் கூந்தலும் அசைந்து சொரிகிறது. நடையின் அதிர்வால் உருவாகும் கூந்தலின் துள்ளி விழுகையும் அதன் அசைவும் ஓர் தனி இரம்மியமாகவே தோன்றுகிறது.

கண்ணம்மாவின் மீதான நேசக்கலந்த பார்வையினால் இயல்பாகவேயுள்ள கூந்தலின் அழகின் மீது மனம் கோலங்களையுமிட்டு மேலும் அழகுள்ளதாக இருக்கிறது. ஓடும் ஆற்றினால் செழுமையடையும் சுற்றுடல் போல சொரியும் கூந்தலால் மூகம், புயம், தோழ் போன்ற உறுப்புக்கள் ஓர் பொலிவையும் வனப்பையும் பெறுகின்றன. மிகமெதுவாக நான் சயிக்கிளை ஓடியவண்ணம் கண்ணம்மாவிற்கு கூந்தல் ஓர் கொடைதான் என்று கூறும்போது அவள் என்னைப் பார்த்து உங்கள் கண் ஞாறு படப்போகுது என்று மிகச் செல்லமாகச் சொல்லிக்கொண்டு எனக்கு ஒழிக்கின்ற பாங்கில் கூந்தலை கையால் ஒதுக்கி முன்னேக்கி மறைத்த காட்சி......

இக்காட்சியைக் கண்ட அதே கண்கள் அவளின் வார்த்தைகளை இரசித்த அதே மனம் இப்போது......... கூந்தலிலிருந்து இரத்தம் பெருகுவதைக் காண்கிறது. எனது கண்களுக்கு அவளின் வெட்டுண்ட ஒவ்வொரு மயிரிக்குள்ளாலும் இரத்தமே சொரிகிறது.

வெட்டுண்டமையும் போதாதென்று மின்விசிறி கூந்தலைத் தூக்கித் தூக்கித் தரையுடன் அடிக்கிறது.

இயற்கைக் கூந்தலின் அருமை தெரிந்த சுபாவிடம் கூட நீதியைக் காண முடியாத கண்ணம்மா ஒருவாறு பொலீஸ் நிலையத்தை அடைகிருள். சுபா வீட்டுத் தொலைபேசியின் காந்தசக்தி கண்ணம்மாவை வீட்டுக்குள் இழுத்து வந்து விடுகிறது.

பல நாளங்களாலும் குட்டு வேண்டியும் பிறருக்கு இனிய இசை எழுப்பும் கண்ணம்மா மேளம் ஒரு நாள் போரிசை எழுப்பும்போது......

கத்தரித்த கைகளெல்லாம்......?

பாக்கியமும் பாலசிங்கமும் ஒருபுறமாக நின்று கையசைத்து சீயூ.... சொல்கின்றனர். அசையும் வாகனம் கையசைத்து சீயூ...... சொல்கிறது.

கத்தரித்த கைகளைவும் கண்ணம்மாவின் முகமும் என் முன் நிழலாடுகின்றன. எதிரே தெரு ஓரத்தில் சவரக்கத்தி நிறைந்த சலூன் தெரிகிறது. என் சயிக்கிளின் சக்கரங்கள் சுழன்கின்றன......

---

(இக்கதையின்பொருட்டு என்னுடன் கலந்துரையாடிய, ஆலோசனை வழங்கிய அன்பர்களான தெய்வம், இன்பப், குண்டு, வட்டம், சோமா, அரியம், புஸ்ப்பா ஆகியோர்க்கு எனது நன்றி உரியதாகும்.)

# அப்பாவி ஆத்துமாக்கள்

அ. வரதராஜன்

வீட்டினுள் நுழைந்த நான் 'எப்படியண்ணன்' என்று கேட்டபடியே அந்த நரைத்த தலைமயிர் ஷேவு எடுக்காத படி இருந்த முகநிலையுடன் ஒரு வாங்கிலில் அண்ணாந்தபடி சிந்தனையில் கிடந்த அந்த மனிதனண்டை சென்றேன். அவ ரும் 'எங்கால இஞ்ச' என்று கேட்டு இருக்க இடம் காட்டி னார்.

நான் அவரைக் காணும் ஒவ்வொரு தடவையும் எனது சிந்தனை ஓடி மீள்வது போல் இப்போதும் 'நான் சிறுவனாக இருந்தபோது அந்த மனிதனைக் கண்ட அவருடன் பழகிய நாள் தொடக்கம் பொதுக்கூட்டம், பிரச்சாரம், துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், தேர்தல், பொலீஸ்நிலையம், மறி யல் வீடு இவைதான் தமது பொழுது போக்காகவும் கடமை யாகவும் கொண்டு வாழ்ந்து வந்ததையும்

அவருடைய சொந்தமாக இருந்த காரொன்றை வித்ததை யும், நிரந்தரத் தொழில் ஒன்று இல்லாது போனதையும், சொந்த வீட்டையும் ஈட்டுக்கு வைத்ததையும், இயக்கத்துக் காக — இனத்துக்காக - நீண்ட காலம்வரை திருமணம் முடிக் காமல் இருந்து (ஒரு காலகட்டத்தில் அந்த மனிதன் இருந்த இயக்கத்துக்கு வாலிபர் பலர் இன விடுதலை பெறும் வரை திருமணம்முடிப்பதில்லை என்றிருந்தனர்) முப்பத்தெட்டு வய துக்குப் பின்னர் தகப்பனின் மரணத் தறுவாயில் மணம் முடித்ததையும் போன்ற பல்வேறு எண்ணங்கள் வந்து சென் றது.

நீண்ட காலப் பழக்கம் காரணமாக அவருடன் மிக நெருக்கமாகவே - ஓர் உறவு பாசநிலையில் - பழகி வந்தேன். அந்த வகையில் நாங்கள் பல்வேறு பிரச்சினைகளையும் பகிர்வது வழமை. நான் வயதில் இளையவனாகவே இருந்த போதிலும் சமவயது நிலையிலேயே பழகிக்கொள்வோம்.

எனது அரசியல் நிலைப்பாடு அவரிலிருந்து வேறுபட்ட போதிலும் இருவரும் பல பிரச்சினைகளை உண்மையாகவே பகிர்ந்து கொள்வோம்.

இயக்கம், இனம் எனத் திரிந்ததால் சொந்தத் தொழில்

முயற்சியெதுவும் நிலைப்பாடடையவில்லை. வறுமை வயிற்றைத் தட்டி யாரின் கீழாவது வேலை பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததானது.

அது அந்த ஆளை அவரின் இயக்கப் பேராதரவாளன் என அழைக்கப்படும் ஒரு தியேட்டர் முதலாளியிடம் தொழிலாளியாக்கியது.

அதுவும் நீடிக்கவில்லை. இயேட்டர்த் தொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட சம்பள உயர்வுக் கோரிக்கையினால் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டதில் இந்த மனிதனும் ஒருவரானார்.

இப்போது தகராறு வழக்கில் விடுவதில்லை ஒரு கை பார்ப்பது என்ற பிடிவாதம் தொழிலாளரிடையில் அது இவரிடமும் மேலோங்கி நின்றது.

'என்னண்ணன் கேஸை என்ன செய்யப் போறியள்' என்று கேள்வியை நான் போட்டதும் 'எங்களைப்பத்தி இவங்களுக்கு தெரியல்லே ஒரு பாடம் படிப்பிச்சித்தாம் விடுவம். வாறது வரட்டும் மயிரெண்டாச்சு போ' என்று சீறிநின்றார் அந்த மனிதன்.

ஆனால் வீட்டிலோ அடுப்பு கடனில் புகைந்தது. அதுவும் பல தடவைகள் நடைபெறுவதில்லை. சாப்பாட்டு நேரங்களில் வீட்டுக் கோப்பைகளின் அடிப்பக்கம் சத்தம் செய்வது வழமையாகி விட்டது.

என்ன? உங்கட முதலாளி இயக்க ஆள் தானே. தலைவர்களிட்டச் சொல்லிப் பிரச்சினையைத் தீர்க்கலாந் தானே என்றேன்.

அந்த ஆளோ தலைவர்களையும் சாடத் தொடங்கி விட்டது. எப்பொழுதும் அந்த ஆள் தன்னுடன் நெருங்கியவர்களுடன் இயக்கம், தலைவர்களைப்பற்றி உண்மையை ஒப்புக் கொள்வது மட்டுமல்லாது தானே அவற்றைக் கண்டனம் செய்வதில், கிண்டல் செய்வதில் முன்னணி ஆளாகவும் இருப்பார்.

ஆனால் வீதியில் மாற்றுக் கட்சிக்காரர்களுடனோ அவற்றுக்குப் பெரும் வக்கிலாகத்தானே விளங்கி விதண்டாவாதங்களைக் கூசாமல் செய்வார்.

இப்போதும் அவரது கண்டனங்களும், கிண்டல்களும்

பழமை போலவே இருந்த போதிலும், அந்த மனிதனின் வயிற்றுப் பசியுடன் அவையெல்லாம் பின்னியிருந்ததால் எனக்கு ஒருபுறம் வேதனையாகவும் இருந்தது.

அவரது கதைகளிலெல்லாம் வறுமையையும் துன்பத்தையும் வெளிக்காட்டாப் போக்கும் அதேபோல யாருக்கும் தலை தாழ்த்தாப் போக்கும் தொனிக்கும்.

அதல பாதாளத்தில் இருந்து கொண்டும் இமயமலையுச்சியில் இருப்பதாகவே பெசிக்கொண்டிருப்பார். பணக்காரரால் உழக்கப்பட்டபோதிலும் அவர்களையெல்லாம் உழக்குகிறேன் பார் என்று சவால் விடுவார் (இயக்கத்தின் பெயரால்) தலைவர்கள் எனப்படுவோரின் காலடியில் கிடந்து கொண்டே அவர்களெல்லாம் எனக்குப் பின்னால் நிற்பதாகவே எக்காளமிட்டுக் கொள்வார்.

அவருலகத்தையும் நிலைப்பினையும் புரிந்து கொண்ட உண்மை நிலைக்கு இழுத்து வராமல்– இழுத்து வர முடியாமல்– அவர் பேச்சைபெல்லாம் வழிமொழிந்து போவதே என் வழக்கம். அதனையே இப்போதும் செய்யமுடிந்தது.

தியேட்டர் முதலாளிக்காக வழக்குப் பேசப் போகும் அந்தத் தொகுதி பா. உ. வும் இவர் சார்ந்த இயக்கத்தவரே. அவரைக்கண்டு முதலாளிக்காக வழக்குப் பேச வேண்டாம் என்று வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளிகள் சென்ற போது அப் பா. உ. – வழக்கறிஞர் - ' நானென்ன மண்ணையா தின்னுவது ' என்று கேட்டாராம். இவ்வாக்கியத்தினால் ஏற்பட்ட புண்ணின்வேதனை அவர் வாயிலிருந்து நீண்ட உரையிலிருந்து என்னால் தெளிந்து கொள்ள முடிந்தது. அவரது உரைக்கு '' இயக்கத் தொண்டர்கள் மீது சட்டத்தரணிப் பா. உ. க்களின் குதிரை '' என்று தலையங்கம் கொடுக்கலாம் போலிருந்தது.

பிள்ளைகளுக்கு மதிய உணவாக ரொட்டி ஊட்டிக் கொண்டிருந்த அவர் மனைவி எங்களுக்குத் தேநீர் கொண்டு வந்து இடையில் நீட்டினார். அதை வாங்கியபடி

' எப்பிடி உங்கட எம்பி நல்லாளாச்சே என்றேன், தேர்தல் காலத்தின்போது இவர்களையெல்லாம் நம்புகிறீர்களா? நீங்கள் தலைவர்களென்று சொல்பவர்களெல்லாம் வெறும் நடிகர் என்று சொன்னபோது,

எனது சொற்களையெல்லாம் அர்த்தமற்றவை என்று வாதாடி நல்லவர்கள், வல்லவர்கள் என்று எனக்கு மட்டுமல்லாது தான் ஏறிய மேடையிலெல்லாம் காவியம் பாடிய அந்த மனிதன் திட்டுகின்றபோது எனக்கு வேடிக்கையாக இருந்தது ஒருவகையில் வேதனையாயிருந்தது.

இந்நேரத்தில் வேறு மூவர் வணக்கம் கூறியபடி வீட்டினுள் அந்தனர். என்னை அறிமுகப்படுத்தி அவர்களையும் தெரியப்படுத்தியதில் அவர்களும் வேலைநீக்கம் செய்யப்பட்ட மற்றையோர் என்று உணர்ந்து கொண்டேன்.

அவர்களிடையேயான உரையாடல் ‘ விடாதே பிடி ’ என்பதாக காரசாரமாகவும் உணர்ச்சிவயம் நிரம்பியதாகவும் இருந்தது. தமக்குள்ளேயே தம் எதிரிகளை நோக்கி சவால் விட்டார்கள். சவால் பெறவேண்டியவனோ பெறவேண்டியவர்களோ அவ்விடத்தில் இல்லை.

இவர்களெல்லோரும் சென்ற தேர்தலை இனப்போராட்டத்தின் யுத்தகளமாகக் கருதிய கண் துஞ்சாப் போர்வீரர்கள் இன்று தமக்குத் தாக்குதல் நேரிட்டதும், எல்லாப் பிரச்சினைகளையும் ஒரே பக்கம் நின்று இதுகாலவரை பார்த்தவர்கள்- மற்றவர்கள் வேறு பக்கங்களையும் காட்டியபொழுது காட்டியவர்களை வெறுத்தவர்கள் - இன்று இன்னொரு பக்கத்திலும் நின்று விமர்சிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனாலும் எனக்கொரு சந்தேகம் எவ்வளவு தான் இவர்கள் தூய்மையானவர்களான போதிலும் தமக்கொரு தாக்குதல் பாதகமாக ஏற்பட்டபோதுதான் இந்த மாதிரி சிந்திக்கிறார்கள்! நாளை சாதகமாக ஒரு நிலை இவர்களுக்குத் தனிப்பட்ட ரீதியில் ஏற்பட்டால் இவர்களையறியாமலே......!

அவர்கள் கதைகளினிடையில் எம்பிக்கள் அதிகாரத்திடம் அளிக்கப்பட்ட பல வேலைவாய்ப்புக்கள், வேலைவாங்கிப் பத்திரங்கள், கோட்டாக்கள் பலமாக வந்து போயின. இயக்கத்தில் இன்று சேர்ந்து ஒட்டி முன்னணி வகிக்கும் பணக்காரர்கள் மீது கண்டனங்கள் கடுமையாகவே இருந்தன. அவர்களின் கதைப்போக்குகளில் அவர்கள் தமது நடவடிக்கைகளும் விடுதலைப் போராட்டங்களே என்று கருதிக் கொண்டனர்.

அவர்கள் விடுதலைப் போராட்டப்பற்றி எவ்வாறு புரிந்து

கொண்டிருக்கிறார்கள் என்றும் அவதானித்துக்கொண்டேன்.

வந்தார்கள், சவால் விட்டார்கள், உறுமலுடன் வெளியேறினார்கள். எனக்கும் உள்ளூர பாவமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது.

வந்தவர்கள், வெளியேறியதும் நான் 'அது சரியண்ணை தலைவர் எப்பிடி.' என்றதும்

'அந்தாளல்லோ மனுசன், அவன் உண்மையிலேயே தலைவன் தான், திறமைசாலிதான். போன அரசாங்கத்திலை அவரும் காக்கா விட்டவர்தான் ஆனா இப்ப பேச்சுக்களெல்லாம் நல்லாத் திருந்தியிருக்கு. அந்தாள் உண்மையிலே அடிப்படைத் தொண்டன்தானே. இவங்களெல்லோ சுத்தி நிண்டு கெடுக்கிறவங்கள்' என்றார்.

தலைவரை, இயக்கத்தை, கொள்கையையெல்லாம் தூரத்தில் நின்று அழகை ரசிக்கும் மனிதர்களுள் ஒருவராகவே அவரும் இருந்தார்.

'அப்பிடியெண்டா வாற கிழமை அவற்றை முப்பதாவது ஆண்டு அரசியல் வாழ்வு விழாவுக்கு என்ன மாதிரி' என்றதும்,

நாங்கள் பட்டினி இவங்களுக்கு விழா இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கோணும் என்றவரை 'அப்பிடியெண்டா எதிர்க்கப் போறியளா' என்றதற்கும் இல்லையென்றுவிட்டார். ஆனால் கலந்து கொள்வதில்லை என்றும் கூறிவிட்டார்.

நீண்ட நேரம் கதைத்த நானும் அந்தாளின் பரிதாப நிலையையும் அதேவேளை அவர்களின் நம்பிக்கையையும் எண்ணியபடி விடைபெற்றேன்.

அந்த மனிதனின் வீடும் நான் சந்தைக்குப் போகும் பாதையில் இருந்ததால் அடிக்கடி தொடர்புடையதாகவே இருந்தது.

அடுத்த வாரம் அவரியக்கத் தலைவரின் அரசியல் வாழ்வு விழாவுக்கான ஒழுங்குகள் விழா நாட்காலை நடைபெற்றுக் கொண்டது. அந்த மனிதனின் வீட்டுக்குச் சற்று தூரத்தில் தான் விழா நடக்கும் மண்டபம் இருந்தது.

வீதிகளில் சிகரங்கள், வளைவுகள், தோரணங்கள் நிறைந்தது. பல இளைஞர்கள் மும்முரமாக இருந்தனர்.

சைக்கிளில் சென்ற எனக்குப் பலமான ஒரு யோசனை. 'இவர்களுக்கு விரக்தி வரவில்லையா - உண்மை தெரியவில்லையா' இல்லை இவர்களுக்கு காலம் கிடக்கிறது. இந்தத் தலைவர்கள் முன்னணியில் வாழ்ந்து கொண்டேயிருப்பார்கள். விரக்தியடைந்தவர்கள் ஒதுங்கிக் கொள்வார்கள் விரக்தியடையத் தொடங்கி எதிர்க்க முயற்சிப்பவர்கள் தலைவர்கள் எனப்படுவோரால் எதிரிகள், துரோகிகள், புல்லுருவிகள் எனப்பட்டம் சூட்டப்பட்டு ஒதுக்கப்பட்டு விடுவாாகள். புதிதாக இயங்க நுழைவோர் பாதுகாப்பு வழங்குவார்கள். அப்பாதுகாப்பில் தலைவர்கள் சுகம் பெறுவார்கள். இதனால் இவர்கள் அழிய மாட்டார்கள்.

இவ்வாறுகப் பலமான யோசனை எங்கெங்கோவெல்லாம் சென்று வந்தது. எனது கைகள் மட்டும் சைக்கிளை சந்தை நோக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது. எனது கண் ஓரிடத்தில் நிலைக்குத்த யோசனை திருப்பி அங்கு நோக்கியது.

அங்கே அந்த மனிதனும் நேற்று அவர் வீட்டுக்கு வந்த ஏனையோரும் நின்று தோரணம் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

'குட்மோர்னிங்' என்றபடி சைக்கிளை அவரருகில் நிற்பாட்டினேன். தன்னுடைய முடிவுகள் ஒவ்வொன்றும் நூறு ,வீதம் சரியானவை என்று கருதி நடைபோடும் அந்த மனிதன் தலை குனியாப் பண்புடன் விழா ஒழுங்கு செய்யவேண்டி எப்பி தன் வீடு நோக்கிக் காரில் நேராக வந்து கேட்டுக் கொண்டதைப் பெருமையாக்கிக் கொண்டார்.

சிறிது நேரம் கதைத்துவிட்டு சைக்கிளை உழக்கிய நான் நேரே காரில் வந்ததால் அத்தனையையும் மறந்து விட்ட அந்த உத்தம ஆத்துமாக்கள் நீண்ட நேரம் என் நெஞ்சில் நிலைபெற்றிருந்தார்கள்.

மற்றொரு புறத்தில் 'எப்படி உலகில் தலைமை வாழ்கிறது' என்பதையும் எனது மனம் பதிவு செய்துகொண்டது.

# சேவல்களும் கோழிகளும்

வல்வை ச. பாலசுப்பிரமணியம்

அது கலகாச் சந்தி. பேராதனை. மாலை நேரம் ஆறு மணியிருக்கும். மழைத் தூறல்கள் சகஜமான அந்த இடத்தில் இப்பொழுது மேகங்கள் மனிதர்களுக்குச் சலுகை காட்டி மெதுவாக ஒரு திசையில் அசைந்து கொண்டிருக்கின்றன.

அது பெரஹாரச் சீசனில் ஒரு நாள்.

ராஜியும் நித்தியும் அந்த பஸ் ஹோல்ற்றில் நிற்கிறார்கள். ராஜி பேராதனை வளாகத்தில் கணிதம் (சிறப்பு) பயின்று கொண்டிருக்கின்றான். ராஜி - ராஜேந்திரா என்ற பெயரின் மருவல். தாய்க்கு ஒரு பிள்ளை; செல்லம் அதிகம். அது 'ராஜி' யில் இருக்கிறது. வட்ட முகம், கறுப்பு நிறம். எப்பொழுதும் ஒன்றில் அலைமோதும் கலகலப்பு — இல்லை பேல் ஆழ்ந்த சிந்தனை. முழுக்கைச் சேர்ட்டும் ஆளும் 'புரொபெசர்' மாதிரி. நினைப்பும் அப்பிடித்தான். மற்றையவன் நித்தி. நித்தியானந்தன் என்ற பெயரின் சுருக்கம். வயது இருபத்தி ஒன்று மெலிதான தேகம். கீழே சற்றுக் குவிந்த நாடி. மேலே சற்று அகலமான நெற்றி. எப்போதும் கள்ளமற்ற சிரிப்பு நண்பர்கள் மத்தியில்; பெரியவர்கள் முன்னிலையில் 'உம்' என்ற மௌனம்; பெண்களின் முன்னிலையில் அசட்டுத்தனமான சிரிப்பு. தொடர்ந்து ஏதோ கள்ளத்தனம் செய்து விட்டவன் போல நிலத்தை நோக்கி ஒரு தலை கவிழ்ப்பு.

நித்தி தற்போது வீட்டிலிருந்து வாசி, எப்போதும் அப்பாவின் பேச்சு- " ஏன்டா கல்லுப்போலே குந்தியிருக்கிறாய். போன முறை சரியாய்ப் படிச்சிருந்தால் யூனிவர்சிற்றிக்குப் போயிருக்கலாமே " சென்ற தடவை G. C. E. (A|L) இல் 'A, B, F, F' இந்தத் தடவை 'A, B, C, S' இந்தமுறை எப்படியும் பல்கலைக்கழகம் போவான் போன முறை 'A, B,' மட்டும் எடுத்ததிற்காக நண்பர்கள் ஏசினார்கள். பல்கலைக்கழகப் பெண்களைப்பற்றி கதைகதையாகச் சொன்னார்கள். பல்கலைக்கழகத்திற்குப் புதிதாகப் போபவர்களை ஏதோ 'றாகிங்' செய்வார்களாமே எப்படி? அறைக்குள் கூட்டிச் சென்று

சேட், ரவுசர் எல்லாவற்றையும் கழற்றி......... நித்திக்கு 'சாடையான' பழக்கம் தான், கடைசி முறை A L. எடுக்க வென்று ரவுனில் தங்கியிருந்து படிக்கையில், இன்னொரு பெடியனுடன் அறையில்...... அப்போது ஒருத்தன் மட்டும் தானே இருந்தான். அங்கு எல்லாரும் நிற்பார்களாமே? – பெண்களும் நிற்பார்களோ? பெண்களை நினைக்கையிலே நித்தியின் நெஞ்சினுள் குறுகுறுப்பு; படபடப்பு; வெட்கம்; குற்ற உணர்ச்சி. ஏன் இப்பிடி? ரவுனில் பாடம் முடிந்து உலாவும்போது எல்லாரும் பெண்களுக்குப் பின்னால் செல்வார்கள். சைக்கிள்களில் ஏறிக்கொண்டு பெண்களுக்கு முன்னால் சென்று அரைவட்டம் அடித்துத் திரும்புவார்கள். பெண்களும் சிரிப்பார்கள்... மெலிதாக சிலவேளைகளில் குலுங்கி குலுங்கி... நித்தி தனியே வருவான்... மெலிதாக 'விசில்' அடிப்பான். பெண்கள் சிரிப்பார்கள் – பரிதாபமாக...

'மீனராசி' 'மிதுனராசி' என்றெல்லாம் பலன்கள் எழுதியிருக்கிறார்கள் 'முகராசி' க்கு ஏதாவது? 'முகராசி' என்றொரு புத்தகம் வந்திருந்தால் நித்தி வாங்கிப் படித்திருப்பான். மற்றையவர்களின் சாதனைகளுக்கு நித்தி ஏங்கியிருக்கின்றான்.

நித்தி தேற்றுத்தான் பேராதனை வளாகம் வந்தான். 'அருணாசல' த்தில் தங்கியிருக்கிறான். ஸ்பிரிங் கட்டிலில் சுகவாசம். சந்தைபோல சப்தத்துடன் சாப்பாட்டு அறை சப்பலும் புல்லும் போன்ற கீரையுடனும் சோறு. கலகா வீதியால் பெண்கள் போவார்கள். மண்டபத்தின் ஒட்டுக்களிலிருந்து உயரமான புற்றரைகளிலிருந்து அவர்களுக்கு, அழைப்பு'.

'அழைப்பு' கள் விணாய்த்தான் போகும். மண்டப அறைகளுக்கு அவர்கள் வரயாட்டார்கள். சிலவேளைகளில் வேறு எங்கெங்கெல்லாமோ வருவார்களாம். நித்திக்கு தானும் 'அழைக்க' வேண்டும் போலிருந்தது .. இந்த வளாகம் கிடைத்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்? 'தரப்படுத்தல்' ஞாபகம் வந்தது... மொட்டைத்தலை மந்திரியும் ஞாபகம் வந்தார் . 'சீ... இந்த முறை எப்பிடியும் பேராதனை கிடைக்கும்... எப்பிடியும் இஞ்சைதான் வருவன்... கம்பஸ் எண்டால் இதுதான் கம்பஸ்'.

நித்தியும் ராஜியும் பஸ்ஸிற்காகவும் இன்னொருவனுக்காகவும் காத்து நின்றார்கள். அவன் வரும்வரை... பஸ்கள் அடுக்

தடுத்து கண்டியை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன. அவனு டன் 'பெரஹார' போனல் நல்லாய் என்ஜோய் பண்ண லாமாம். ராஜிதான் சொன்ஞன்.

❀ ❀ ❀

ராஜிக்கு இப்போது ஒரு பிரச்சினை... வேறு என்ன...... காதல் தான்... காதல் இல்லையேல் தாடி வளர்க்கிறதாம்... காதல் என்று அதைச் சொல்ல முடியாது... 'அப்ளிக்கே சன்' குடுத்திருக்கிருனும். சிலவேளை 'சக்ஸஸ்' தானும் ஒரு வேளை 'பூட்ஸ்' கிடைக்குமாம். லீவுக்கு வீட்டுக்குப் போய் வந்து பதில் தருவாளாம்.

''எப்படியப்பா லவ் தொடங்கினது?'' நித்தி ஆவ லாய்க் கேட்டான். சிகரெட்டை ஊதிக்கொண்டு கட்டிலில் சாய்ந்து கொண்டு மேலே பார்த்தவனுய் பதில் சொல்ல ஆரம்பித்தான் ராஜி:

''ம்... அது ஒரு பெரிய கதை.. ஒரு நாள் நம்ம கிருபா இருக்கிறனே கிருபா. (கிருபா — ஏதோ ஒரு 'சிறப்பு') அவன் தான் சொன்னவன் கிருபாவிற்கும் நம்ம 'ஆவ ளின்ரை' ரூம் மேற்றிற்கும்... அவளெண்டு ஆர் தெரியுமோ... அது தான் நம்ம ஜெயமதி. (கலை - முதலாம் வருடம்) அவைக்கே சாடையான லைன்..... இவன் கிருபா இப்பிடித் தான்... அவன் மன்னன்... பிறகு அவனைச் சந்திப்பம்..... சரியோ'' சிகரெட்டை இழுத்து ஊதி எறிந்துவிட்டு கட்டி லில் எழுந்திருந்து கொண்டு தொடர்ந்தான் ராஜி; ''சரியோ... கிருபா தான் வந்து சொன்னவன்... ஜெயத் திற்கு என்னிலை சாடையான விருப்பம் எண்டு... நான் அதுக் குப் பிறகுதான் ஆளை நோற் பண்ணினன்... ஜெயம் அவ்வ ளவு வடிவில்லைத்தான்... எண்டாலும் அதை ஏன் கேட்கி றுய்.. எப்பவும் சாறிதான்.. சாறியை இப்பிடிப்போட்டு விட்டு.. இஞ்சை எங்கையடா பாக்கிறுய்.. நான் கதை சொல்லுறன் நீ ஜன்னலுக்குள்ளாலே பெட்டையேச பாக்கி றுய்... அ... பொறு.. பொறு... இரவைக்கு பெரஹார போவம் எல்லாம் செய்யலாம். ஆனு நான் செய்யமாட் டன் அது - அவளுக்கு துரோகம் - நீ செய்...

''சரி... சரி... சொல்லும்''

''ம்... என்ன சொன்னனுன் - நம்ம ஜெயம்..... ம்

சாறியை இப்பிடிப் போட்டிட்டு தொங்சலே... அதுதான் சீலை நுனி இருக்கெல்லே... அதை இப்பிடி கை விரல்லே சுத்திக் கொண்டு நிப்பாளடா... அதை என்னண்டா உனக்குச் சொல்லுறது... உனக்கு ஆளைக் காட்டத்தான் வேணும்.. அக்சிடெண்டா கண்டா காட்டிறன்... இப்ப ஆளுக்கு முன்னால போனா என்னை வழியிதெண்டு நினைப்பாள்... ஏனெனில் 'காதல் என்டது வெறும் சந்திப்புக்களாலும், உரையாடல்களாலும் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. ஆகவே காதலை அணுகும்போது கவனமாக... மெதுவாக (திடீரென்று கணிதம் (சிறப்பு) தன் புத்தியை தமிழில் காட்ட ஆரம்பிக்கின்றது)''

''சரி... சரி... உம்முடைய ஸ்ரைலை விட்டுவிட்டுக் கதையைச் சொல்லும்''

''டேய் சும்மா இரடா (செஞ்சலாக).. ம் எனக்கொரு கவலைதான்... நானும சயன்ஸ் அவளும் சயன்ஸ் எண்டா ரெண்டு பேரும் ஒண்டா கணக்குச் செய்யலாம்... பரவாயில்லை... அதிலே என்ன?– நான் சயன்ஸ் அவள் ஆர்ட்ஸ்... ம்.. ம்... நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்... ம்.. ம்...''

''சரி... சரி.. பாடத்துவங்கியாச்சோ?'' (அலுப்பாக)

பாட்டை நிறுத்திவிட்டு தொடர்ந்தான் ராஜி ''ஒரு நாள்... ரெயின்லை வரேக்கை... அதுதான் கம்பஸ் தொடங்கிறதுக்கு முதல்நாள் இரவு மெயில் இருக்கெல்லே... அதை நாங்கள் கப்பல் எண்டு சொல்லுறது. கப்பல்லை வரேக்கை... நான் மாகோவிலை இறங்கி சிகரெட் வாங்கினனான். அப்ப பார்த்து... அப்பமட்டும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தவள்... திடீரெண்டு தலையை உள்ளுக்கு இழுத்துப்போட்டாள்... ஒண்டு மட்டும் சொல்லுறன்... விசயம் சக்ஸஸ் எண்டால் ஐயா சிகரெட்டையும் விடுவார்... இல்லாட்டி...'' சொல்லி முடித்துவிட்டு கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தான் ராஜி.

மொத்தத்தில் ராஜி ஒரு 'இன்ரறெஸ்ரிங் காப்ற்' ராஜி சிலசமயங்களில்... ஒரு குழந்தைபோல... ஒரு தத்துவஞானி போல... ராஜி ஒரு கணிதமேதை... கலைரசிகன்... நல்ல நண்பன்... அடிக்கடி உணர்வுகளில் மாறுகின்ற ஒரு மனிதன்.

நித்திக்கு ராஜியை ரெப்பவும் பிடிக்கும்.

❀ ❀ ❀

நித்தியும் ராஜியும் அந்த பஸ் ஹோல்ற்றில் நெடுநேரம்

நின்ருர்கள்... எதிரேயிருக்கின்ற போஸ்ற் ஒட்சையும், கலகா ரேட்டின் அருகே அமைந்திருக்கின்ற மெடிக்கல் (f) பகல்ற்றி யையும் ஓடுகின்ற பஸ்களையும் பார்த்துக் கொள்வது முடிகை யில் அவன் கிருபா கலகா ரேட்டால் விரைந்து வந்தான்.

நித்திக்கும் ராஜிக்கும் நிம்மதி வந்தது.

கிருபா - மெல்லிய தோற்றம் தான். நித்தியின் உயரத் திற்குச் சமமான உயரம்... மேலுதட்டில் கோடிழுத்தது போல ஒரு மீசை... கையில் புகையும் சிகரெட்டு... மொத்த த்தில் ' ரெட்சன் ' படத்தில் வருவானே... அந்த மீசைக்கா ரன்... என்ன பெயர்? சார்ள்ஸ் புரோன்சன்... சரியா... அவன் மாதிரித்தான் இருந்தான் கிருபா.

'' ஏண்டா... இவ்வளவு நேரம் லேற்... நாங்கள் உனக் கோயிரம் ' அருண் ' லேயிருந்து வந்து இஞ்சை நிக்கிறம்... ம்... ''

'' பொறு... மச்சான்... பொறு... நல்ல நித்திரை அடிச் சிட்டன்... ஹலோ (புன்முறுவலுடன்) இவர் ஆர்... ''

'' இவர் நித்தி... நித்தியானந்தன்... நம்ம பிரண்ட்... ஊரிலையிருந்து வந்திருக்கிருர். சிலவேளை இந்த முறை இஞ்சை வருவார்... ''

நித்தியுடன் கைகுலுக்கிஞன் கா. புரோன்சன். ''இவன் தான் கிருபா... நான் சொன்னன்... பிசிக்ஸ் ஸ்பெசல் ''

பேராதனை வளாகத்தில் நித்தி அநேக ஸ்பெசல் (சிறப்பு) களை சந்தித்தான். சிலர் கண்ணுடி போட்டிருந்தார்கள். சிலர் '' நாங்களெங்கையப்பா படிக்கிறது... ஸ்பெசல் எண்டு பேர் தான். ஜெனரல் செய்திருக்கலாம் ச...... விட்டுவிட் டம்... '' என்ருர்கள். சிலர் டிபார்ட்மென்ட்களில் இருக்கி ருர்கள்... விரிவுரை செய்கிருர்கள். சம்பளம் வாங்கிக் கொள் கிருர்கள். அடிக்கடி கண்டி போகிருர்கள்.

நித்திக்கு சந்தோசமாயிருந்தது. மூவரும் கதைத்துக் கொண்டவர்களாய் பஸ்ஸை எதிர்பார்த்துக் கொண்டிருந்த னர். பஸ்களோ கண்டியிலிருந்து ஓடிக்கொண்டிருந்தன.

சிறிது நேரம் கழித்து ஒரு பஸ்வண்டி வந்தது.

❀ ❀ ❀

நித்திதான் முதலில் பஸ்ஸிற்குள் நுழைந்தான். பஸ் மூவரையும் விழுங்கியது. புகைகக்கிக் கொண்டு உறும லுடன் குலுக்கிக் கொண்டு புறப்பட்டது. பஸ் பழையது. ஒரு ' டெக்கர் ' இல்லாமல் போன டபிள்டெக்கர்.

கொண்டெக்டர் வாசலில் நின்று கொண்டு தொண்டை கிழியக் கிழிய 'இசராட்ட' சொல்லாத கொண்டெக்டர் சீற்றில் இருந்துகொண்டு 'ஸ்...ர்...ர்...ட்'ஸ்...ர்...ர் ...ட்' போடுகிற கொண்டெக்டர்.

ராஜி மூவருக்கும் ரிக்கற் எடுத்தான். நித்தி கொண்டெக்டரின் அருகில் போயமர்ந்தான்.

பஸ் அடுத்த ஹோல்ற்றில் போய் நின்றது.

ஆட்கள் ஏறினார்கள். "நுவர தெக்காய்... பாஹிபாய்..." என்றெல்லாம் சொன்னார்கள். கொண்டெக்டர் 'ஸ்...ர்...ர்...ட்' போட்டார். காசுகளையும் வாங்கிக் கொண்டார்.

நித்தி நிமிர்ந்து பார்த்தான். திகைத்தான்... சீ... கவனிக்கவேயில்லை. ஒரு பெண்... விஜயலலிதா... சரியா அவள் மாதிரித்தான். அவளின் மேற்சட்டைக்கும் கீழ்ச்சட்டைக்கும் இடையில் தெரிந்த... (வர்ணனை - ஆபாசம் - தணிக்கை)

அவள் சிரித்தாள். மோகனப்பல்வரிசை... நித்தியைப் பார்த்து. நித்தி எழுந்தான். கையால் 'சீற்' றைக் காட்டினான். 'சிற் டவுன்' என்றான். சிரித்தான்... பார்த்தான்... 'ஹி... ஹி'

அவள் 'சீற்' றில் இருந்தாள்.

பஸ் ஹோல்ற்றுகளில் நின்றது. ஆட்கள் ஏறினார்கள். கொண்டெக்டர் 'ஸ்...ர்...ர்...ட்' கள் போட்டார். காசுகள் சேர்ந்தன... நித்தி நன்றாக 'இசரட்ட' ஆகியிருந்தான்.

நித்திக்குள் மோகனப் பல்வரிசை சிரித்துக் கொண்டிருந்தது. சிரிப்பு சற்று அணைந்தது... ராஜியை எங்கேயென்று தேடினான் நித்தி. "என்ன... ஐ. சே... கோழிக்கு இடம் குடுத்தாச்சோ" என்றான், கா. புரோன்சன் நித்தி இடுக்கிட்டான். அருகில் பார்த்தான். இருவரும் பக்கத்திலேயே நின்றிருந்தான். ராஜியும் கா. புரோன்சனும் சிரித்தார்கள்.

நித்தி அவர்கள் முன்னிருந்த இடத்தைப் பார்த்தான் அங்கேயும் கோழிகள் இருந்தன. வயது போன கோழிகள். பஸ்வண்டி கண்டியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

❀ ❀ ❀

பஸ் கண்டியில் போய் நின்றது, மூவரும் இறங்கினார்கள், ராஜியும் கா. புரோன்சனும் முன்னே நடந்தார்கள், நித்தியும் இறங்கினான். பின்னாலிருந்து யாரோ சிலிப்பரில் மிதித்தார்கள். அறந்தது' அந்தக் கோழி தான், நித்தி சிரித்

தான். மோகனப்பல்வரிசையும் சிரித்தது. நித்தி சிலிப்பரைக் கையில் எடுத்தான். பின்னை வடிவாகக் குத்தினான். சிலிப்பரைக் கமலில் போட்டுக் கொண்டான். விஜயலலிதாக் கோழியின் பின்னால் செல்ல நினைத்தான், "டேய்... டேய்... இஞ்சை வாடா... அதெல்லாம் பிறகு பார்ப்பம்..." என்றார்கள். பலமாகச் சிரித்துக் கொண்டார்கள்.

நித்தி அவர்கள் பின்னால் (அசடு வழிய) சிரித்துக் கொண்டே சென்றான்.

❀ ❀ ❀

மூவரும் ஹோட்டலொன்றுக்குள் நுழைந்தார்கள். ஹோட்டலில் இரண்டு பிரிவுகள் இருந்தன. ராஜி நித்தியின் தோளில் கையைப் போட்டுக் கொண்டவனாய் இரகசியமாகச் சொன்னான்; "இஞ்சாலே இருக்கிற செக்சன் இருக்குதெல்லே... அது பெரிய கைகளுக்கு... சும்மா ரீ குடிச்சாலே பத்து ரூபாய்வரும்... பெரிய இடத்துக் கோழியெல்லாம் வரும்... பிடிக்கலாம்தான்... என்டாலும் நமக்கெல்லாம் சரிப்பட்டு வராது.. எங்களுக்கு இந்த 'காறு' செக்சன் தான் சரி.." மூவரும் 'காறு' செக்சனுக்குள் நுழைந்தார்கள். கதிரைகளில் அமர்ந்தார்கள்.

"சீ... நாங்கள் அந்த நாளிலே..... என்ன மச்சான்.. நானும் இவனும் பிடிக்காத கோழிகளே .. ம் .. இப்ப நான் ஜெபமதியிலே .. இவன்... டேய் எங்கையடா உன்ரை ஆள்.."

நித்தி கா. புரோன்சனை ஆவலாய்ப் பார்த்தான்.

கா. புரோன்சன் 'சிகரெட்' டை வாயில் வைத்தான். நெருப்பை மூட்டினான்... இழுத்தான்... ஊதினான். நித்திக்கு பழைய இரெயில் ஞாபகம் வந்தது.

கா. புரோன்சன் தொண்டையை செருமிக் கொண்டவனாய் சொல்ல ஆரம்பித்தான்... "ஐ.. சே.. என்னுடைய கண்ணைப் பாரும்.. வடிவாப் பாரும்.. (மயக்குகிற மாதிரி பார்த்துக் கொண்டான்) ஏதாவது உமக்குத் தெரியுதோ?" என்றான்.

நித்தி யோசித்தான் என்ன சொல்லலாமென்று...

"ஹலோ... இஞ்சை பாரும்... நீர் இப்பதானே ஒரு கோழியைத் தான் கண்டீர்... அது என்ன ஒரு கோழியோ... நீர் என்ன அந்தக் கோழியைத் தான் கண்டனீரே... ஐ..

சே... நான் எத்தினை கோழிகளைக் கண்டனான்... நீர் போயும் போயும் ஒரு 'காரு' வைக் கண்டிட்டு அதுக்குப் பின்னாலை போகப் பார்க்கிறீர்... அ... '' என்று அதட்டினான்.

நித்திக்கு என்னவோ போலிருந்தது... சிரிக்கவும் முடியாமல்... அவனை நேரே பார்க்கவும் முடியாமல்...

'' ஹலோ... நீர் ஒண்டுக்கும் யோசியாதையும்... எல்லாரும் தொடக்கத்திலை இப்பிடித்தான்.. ஒருக்கால் டேய் ராஜி... ' அகுண' லே எங்களோடை இருந்தான். அவனுக்கு என்ன பேர்... அ... ''

'' விசயனையே கேட்கிறாய்...''

'' யேஸ்... யேஸ்... (நித்தியை பார்த்து) ஆளும் உம்மை மாதிரித்தான் ஐ. சே.. ஆனை நான்தான் முதல்லே பெர ஹாரவிற்கு கூட்டி வந்தனான்... அப்ப எல்லாம் நானும் எவ்வளவு என்ஜோய் பண்ணினனான். (சிகரெட் சாம்பலை தட்டி விட்டுக் கொண்டவனாய்) இப்பஎல்லாம் அலுத்துப்போச்சு... இனி என்ன டிகிரி முடிய.. கிளாசும் வரும்... பீஸ்புள்லா தீலகாவையும் கூட்டிக்கொண்டு ' போரின் ' போக வேண்டியதுதான்... ம்... எல்லாம் கெதியிலை சரி வரும் போலை இருக்கு... என்ன ஐ. சே.. ஒரு மாதிரி யோசிக்கிறீர்... யோசியாதையும் உமக்கும் ஒரு வெடிங் இன்விற்றேசன் அனுப்புவன்... கட்டாயம வருவீர்தானே... ''

நித்தி ' ஓம் ' என்று தலையை ஆட்டினான்.

'' அ... அ... என்ன சொல்ல வந்தனான்... விசயன்ரை கதை என்ன... அ... ஆனை... நான் தான் முதல்லை கூட்டி வந்தனான்... முதல் நாள் இந்த ஸ்ரேட்டிலைதான்... அப்ப நாங்களும் கோழியெல்லாம் பிடிக்கிறது தானே... (சிகரெட்டில் ஒரு ' தம் ' இழுத்தான்; புகையை ஊதினான்) ஹலோ... இந்தக் கோழிகள் இருக்கெல்லை .. உம்முடைய வீட்டிலை கோழிகள் இருக்குதோ... '' என்றான். '' மிருகக் கோழிகள் ஐ. சே ''

நித்தி ' இல்லை ' என்று தலையை ஆட்டினான்.

' முதல்லை எல்லாக் கோழிகளும் ஒரு மாதிரி உதறத்தான் பார்க்கும்... ஒரு மாதிரி நைசா பிடிச்சிர் எண்டா... ஐ. சே.. கோழி பிடிக்கிறதிலையும் ஒரு ' ரெக்னிக் ' இருக்குத் தெரியுமோ.. நைசா... மெதுவா '

' விசயனைப்பற்றிச் சொல்லனடா... ' என்றான் ராஜி.

கா. புரோன்சனும் 'சிகரெட்'டில் ஒரு 'தம்' இழுத்துவிட்டுத் தொடர்ந்தான்...

"ம்... விசயன்... ஆள் உம்மை மாதிரித்தான்... புதிசு... அப்ப யோசிச்சுக் கொண்டு நிண்டவர்... முதல் நாள் கூட்டி வந்து காட்டினனம்... அடுத்த நாள் பார்த்தா... ஆள் எங்களையும் விட்டிட்டு நைசா வெளிக்கிடுறார்... எங்கையடா போறாய் எண்டா... ஆள் என்ன சொன்னவர் தெரியுமோ— கோழி பிடிக்கலாம்" என்று சொல்லிவிட்டு கா. புரோன்சன் சிரித்தான்... மந்தகாசமான சிரிப்பு... ராஜியும் சிரித்தான்... நித்தியும் சிரித்தான்.

❁ ❁ ❁

மூவரும் ஹோட்டலுக்குள்ளிருந்து வெளியே வந்தனர். நித்தியின் மனதில் முன்பொரு நாள் நடந்த சம்பவம் நினைவில் வந்தது... நல்லூர்க் கோவில் திருவிழாவிற்குள் பெடியளோடை... அவங்கள் தான் 'மச்சான் பிடியடா' எண்டவங்கள்... நித்தி மெதுவாகப் பிடிக்கப்போக .. அந்தக் கோழி இவன் கையை உதறி 'ஆ' என்று கத்த... பொலிஸ் நித்தியின் சிநேகிதன் ஒருவனைப் பிடித்து அடிக்க.. நித்தி துடிதுடித்துப்போய்.. பிறகு நித்தி திருவிழாக் கூட்டத்திற்குப் போவதுமில்லை .. கோழி பிடிக்க முயற்சித்ததுமில்லை.

நித்தி யோசித்தான். வீதியில் கோழிகள் நிறைய நிறைய பெரஹார பார்க்கப் போய்க் கொண்டிருந்தன... 'சீ... இவன்களெல்லாம் எவ்வளவு என்ஜோய் பண்ணியிருக்கிறான்கள்... பிறகு காதலிக்கிறான்கள் .. சீ .. காதலாம் காதல்... மடையன்கள்... என்ஜோய்மென்ற் இல்லாத பிறவிகள்'

சனக்கூட்டத்தினுள் நுழைந்து 'பெரஹார' வரும் இடத்தை நோக்கிச் சென்றனர்,

நித்தி மெதுவாக எதிரே வந்த கோழி ஒன்றுடன்... - சிறிது தூரம் சென்று திரும்பிப் பார்த்தான். கோழி ஒன்றும் நடவாதது போல சென்று கொண்டிருந்தது.

ராஜியும் கா. புரோன்சனும் முன்னே சென்று கொண்டிருந்தார்கள்... எங்கேயும் கோழிகள்... முன்னேயும் பின்னேயும்... மாடிக் கட்டிடங்களிலும் மரங்களின்கீழும் கோழிகள்... கோழிகள்... நித்திக்கு சொர்க்கத்தினுள் நுழைந்து

விட்டது போலிருந்தது.

❀ ❀ ❀

நித்தி ஆட்களுக்குள் நுழைந்து முன்னேறி கோழிகளுடன் உரசுப்பட்டு... நெளிந்து (கூச்சத்தால்)... 'பெரஹறா' பார்க்க நுழைந்தான்.

ராஜியும் கா. புரோன்சனும் கண்டி வாவியின் மதிலின் மேல் ஏறி நின்று கொண்டனர். தாங்கள் இந்த முறைதான் பெரஹறா பார்க்கப் போவதாகச் சொன்னார்கள். யானைகளையும் தீபங்களையும் எம்பி எம்பி பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

நித்தி '' நான் முன்னுக்கு நிண்டு பாக்கிறன் '' என்று விட்டு கண்கள் நல்லதொரு கோழியைத் தேட... முன்னேறினான்.

நித்தியில் மெல்லிதான ஒரு கோழியின் ஸ்பரிசம். மெதுவாக... முகத்தை நோக்கினான்.. விஜயலலிதாக் கோழி இருக்கிறதே விஜயலலிதாக் கோழி - அது... கோழியும் திரும்பி இவனைப் பார்த்தது... மோகனப் பல்வரிசை சிரித்தது... நித்தி கிறங்கிப் போனான்... சிரித்தான்... சொர்க்கத்திற்கு ஏறினான்... கைகளை மெதுவாக... நைசாக முன்னேற்றி - இனி என்ன?... சொர்க்கத்தின் திறப்பு விழா...

(ஆபாசம்... ஆபாசம் – தணிக்கை)

ஆனால் நித்தியின் பின்னால்... நித்தியின் பின்பொக்கற்றுக்குள் இருந்த அம்மா ' அப்பு... கவனம்... காசைக் கவனமாய் வைச்சிரு ' என்று சொல்லித் தந்த காசையும் பேர்ஸையும் ஒருவன் எடுத்துக் கொண்டிருந்தான்.

நித்தி வெகுநேரம் சொர்க்கத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

---

இலக்கியம் என்பது :

சமூகப் பிரச்சனைகளை; சமூக உணர்வுகளை; மக்களுக்கு இலகுவாக விளங்கக்கூடிய; விருப்பமான வகையில்; பிரதிபலிக்கச் செய்வதோடு; அவற்றுக்கான தீர்வுகளை கொடுக்கவோ, அல்லது அனுபவிப்பவர்களின் சிந்தனையை தீர்வுக்குத் தூண்டுவதையோ, செய்யும் ஒரு யுக்தியாகும்.

'' அகளங்கன் ''

# மீண்டும் கோழையாய்........

அகளங்கன்

1977 ஆவணி மாதத்தில் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தின்போது............

பால்மணம் மாறாத பச்சிளங்குழந்தையை அந்தப்பாவி..... ஐயோ! பாவம், பரிதாபம். இப்படியுமா அநியாயம் நடக்கும் தாயின்நிலை அதைவிடப் பரிதாபம். அந்தக் காடையன் அவளது கைகளில் இருந்த குழந்தையைப் பறிக்கிறான். அவள்.........

" ஐயோ! என் குழந்தை..... என் குழந்தை......" ஓலமிடுகின்றாள். அந்தக் காடையர்களில் ஒருவன் ஈவிரக்கமின்றி அவளது கன்னத்தில் அடிக்கின்றான். பின்னால் நின்ற ஒரு பாவி அவளது தலைமயிரைப் பற்றி இழுக்கின்றான். அவள் பின்னால் வந்து விழுந்து துடிக்கிறாள். புலம்புகின்றாள் அந்தக் கொடியவன் குழந்தையை அப்படியே தரையில் போடுகிறான். அவனால் பொறுக்க முடியவில்லை, அருகிலே கிடந்த ஒரு பெரிய கல்லை இரு கைகளாலும் தூக்கிக்கொண்டு ஆவேசம் வந்தவன்போல் எழும்புகின்றான் முன்னால் நிற்கும் காடையனின் தலையை அவனது கல்லு பதம் பார்க்கப் போகிறது, அதற்கிடையில் ..... அதற்கிடையில் ..... தூக்கிய கல்லு அவனது கால்களிலே விழுந்தது. இரத்தம் தெறித்து ஓடியது.

" ஐயோ! அம்மா! ........

அவலக்குரல்தான் அவனால் கொடுக்க முடிந்தது. அவனது வலது கை முறிந்து தூங்குகின்றது. முன்னால் நின்ற சிங்களக் காடையன் ஒருவனது கையிலே இருந்த கொட்டானொன்று இரத்தத்தோடு அவனை ஏறிட்டுப் பார்க்கிறது, அவனைத் தொடர்ந்து அவனருகே நின்ற ஒருவன் அவன் மனிதன் தானா? இல்லை...... இல்லை ...... மிருகம்...... அவனது முறிந்துதொங்கும் கையை தனது கத்தியால்...... ஐயோ! இப்போது அவனது கையில் அவனது கை இருக்கிறது, அவன் மூர்ச்சையுற்று விழப்போகும் நேரம், அவனது முழங்கையை பிடித்துக்கொண்டு அவனது கையாலேயே அவனது முகத்தில் அறைகிறான் .....

தெருவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்பரிதாபத்தை மரப்பொந்து ஒன்றிலே ஒழிந்து கொண்டிருக்கும் இளம் வாலிபன் பார்த்துக்கொண்டு தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறான்.

“இதுவரைகாலமும் சிங்கள மக்களோடு நட்புறவோடு வாழ வேண்டுமென்று கத்தினார்களே!... இதோ சிங்களவர்களுக்கு நாம் நீட்டிய பாசக்கரம்... அந்தக் கரத்தின் நிலை ... அவளது கரம்........ இனியும் சகோதரத்துவம் பற்றி யாராவது பேசமுடியுமா?”

பாவிகள் மிருகங்கள், பச்சிளங் குழந்தையை அது தமிழ்க் குழந்தையாகப் பிறந்த குற்றத்திற்காக கொடுமைப் படுத்துகிறார்கள். ஒரு மிருகம் தனது மரம் போன்ற கால்களால் பூந்தளிர் போன்ற குழந்தையின் மார்பிலே மிதிக்கிறான். குழந்தையின் பிஞ்சுக் கரங்கள், மலர்ச்சரங்கள் அவைகளை அந்த முரட்டு பனிதன் தனது இரும்புக் கைகளால் இழுத்துப் பிடுங்குகிறான். குழந்தை இறந்துதான் இருக்கும். என்றாலும் அவனது வெறி அடங்கவில்லை. பக்கத்தில் அக்குழந்தையின் தாய் தூக்கிய கல்லை எடுத்து அக்குழந்தையின தலையிலே............ ஐயோ......... தலைசிதறி........ ...

“கையிலே ஒரு துவக்கு இருக்குமென்றால் இவர்களை...
”
......

மனதில்தான் எண்ணுகின்றான். இருந்தாலும் அவனது குறிக்கோள் எப்படியாவது தப்பிப்போய்விட வேண்டும் என்பதிலேயே இருக்கிறது. கண்டியில் இருந்து கையிலே, காலிலே, தோளிலே, வயிற்றிலேஎல்லாம் இரத்தம்வடிய சிங்கள நாய்களால் கடித்தெறியப் பட்ட நிலையில் தப்பி வந்து கொண்டிருக்கிறான். எப்படியாவது தமிழ்ப்பகுதிக்குச் சென்று விட வேண்டும். அதுவும் யாழ்ப்பாண மண்ணிற்குச் சென்று அங்கே..... தன் தாய், தந்தை உடன்பிறப்புக்களைக் காண வேண்டுமென்று ஆவலாய் இருக்கிறான்,

ஒருவாறு அந்தக் கூட்டத்தில் சண்சாணுமன் தப்பி வந்துகொண்டிருந்தான் சத்தம் கேட்டு மெல்ல மரத்தடியில் மறைந்து கொண்டு நடப்பதைக் கவனித்தான், பதினெட்டு வயதுப் பாவைமங்கை ஒருத்தியை மூன்று சிங்களக் காடை நாய்கள் இழுத்துச் செல்கின்றன, ஆடை கலைந்திருக்க அந்த

ஆரணங்கு அழுது புலம்பிக்கொண்டு செல்கிறாள். அவளது இளந்தசையை அநுபவிக்கும் ஆசை அந்த நாய்களுக்கு, மரத்தின் பின்னால் மறைந்திருந்த சுந்தரத்தின் உள்ளம் துடித்தது, அவன் ஒளிந்திருந்த காட்டுக்குகைக்கே அவளை இழுத்து வருகிறார்கள். '' அந்தக் கொடுமையை நான் பார்க்கத்தான் வேண்டுமா? ........ அதைவிட என்னை அவர்கள் கண்டு விட்டால் .......''

அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. தப்பிப் போக வேண்டுமென்ற ஆசை அவனது உள்ளத்தில் இருந்து உடலையும் இயக்கியது. ஆனால் அந்தத் தமிழ்ப் பெண்ணின் சேலை ஒரு காமுகனால் இழுத்து கிழித்தெறியப் படும்போது சுந்தரத்தின் இருதயம் திடீரென நின்று விட்டதுபோல் இருந்தது. அவனது காதலி சந்திரா கொழும்பில் ........ அவளது நிலை ..... இதேநிலை அவளுக்கு ஏற்பட்டால் ........ அவனால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை,

'' எப்படியாவது இவளை நான் காப்பாற்றியே தீருவேன். இல்லாவிடில் இந்தக் காட்சியைக் காணாமல் செத்து மடிய வேண்டும்......''

மனதிலே உறுதி பூண்டு கொண்டு எழுந்தான். கைகள் இரண்டிலுமே வலுவில்லை. கண்டியிலே அவன் வாங்கிய அடி அவனது கைகளை அசைக்கக் கூட விடவில்லை, இருந்தாலும் உணர்ச்சி வேகத்தில் எழுந்தான். அவனையுமறியாமல் அவனுக்கு ஒரு பலம்.... மரணபலம் போல் வந்துவிட்டது. பக்கத்திலே கிடந்த தடியொன்றை எடுத்தான், ஓங்கி ஒரே அடி. அந்தப் பாவையின் மேல் சட்டையைக் கிழித்துக் கொண்டிருந்த காமுகனின் தலையிலே விழுந்தது, அதற்குமேல் அவனால் எதுவுமே செய்யமுடியவில்லை, அவனது அங்கங்களிலெல்லாம் அடிகள் விழுந்தன, சிறிது நேரத்தில் அவன் ..... மீண்டும் கண்களை விழித்துப் பார்த்தான், பக்கத்தில் அந்தப் பெண் அரைகுறை ஆடையாய் அலங்கோலமாய்க் கிடந்தாள், அவளின் உடலில் இரத்தம் கன்றிப்போய் சிவந்திருந்தது, அவள்........ அவள்........ மீண்டும் இலங்கையில் தமிழ்ப் பெண்ணாகப் பிறப்பாளா........?

'' என்னால் எனது சமூகத்துக்கு என்ன செய்ய முடிந்தது கேவலம் கண்ணுக்கு முன்னால் ஓர் காரிகை........ கொலை

யும் செய்யப்பட்டு விட்டாள். ஆனால் என் உயிர் மட்டும் இன்னும் என் உடலோடு ஒட்டிக்கொண்டிருக்கிறதே, சீ..... இருபத்தி ஐந்து வயதில் இளம் வயதில் இப்படிக் கையாலாகாதவனாய் வாழ்கிறேனே!........ இப்படியும் வாழவேண்டுமா........."

இடது கை முழங்கையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தது. கால்கள் இரண்டும் வீங்கிப்போய் இருந்தன. உடலெல்லாம் இரத்தச் சிவப்புக் கறையாய் இருந்தது. தவழ்ந்து தவழ்ந்து சென்றான். எங்கே செல்கிறான் என்பது அவனுக்கு தெரியாது, காலையா மாலையா அதுவும் தெரியாது. கடிகாரம் களவாடப்பட்டு விட்டதே. இப்போது அவன் இருக்குமிடம் அநுராதபுரம் போல் இருக்கிறது. பசி..... தாகம்...... எப்படியும் யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்துவிட வேண்டும், "போய்ச் சேர்ந்து விடுவேன்" என்ற நம்பிக்கையைத் தவிர வேறெதுவும் அவனிடம் இல்லை,

அதோ நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. அந்த நெருப்பின்மேலே ஒரு மனிதன் தொங்குகிறான். அந்த மரத்திலே கால் கைகள் சட்டப்பட்டு எரியும் நெருப்பிலே தொங்கிக்கொண்டு துடிக்கிறான்,

" சித்திரவதை சித்திரவதை உயிரோடு எரிக்கப்படும் கொடுமை. அந்த மனிதன் செய்த குற்றம் என்ன? தமிழனாகப் பிறந்தது மட்டுந்தானா?...... இல்லை! இல்லை! ஆயுதம் ஏந்திப் போர்புரியத் தெரியாதது குற்றம். ஆயுதம் வைத்திருக்காதது குற்றம், இந்த மிருகங்களோடு இவ்வளவு காலமும் கை கோர்த்து வாழ்ந்தது குற்றம். இலங்கை ஒரு நாடு என்று கூக்குரல் போட்டது குற்றம்......... அது மட்டுந்தானா...... எமது தலைவர்கள் எம்மை வெறும் வாய்ப்பேச்சு வீரர்களாக வளர்த்தது குற்றம்......"

சுந்தரத்தின் இதயம் குமுறியது, காட்டுக்குகையில் ஒரு புற்று மறைவில் கிடந்து கொண்டு யோசித்தான், நெருப்பிலே அந்தத் தமிழனின் உடலம் துடித்த துடிப்பு......... அதைப் பார்த்து சிங்களவர்கள் களித்துக் கூத்தாடிய காட்சி..... அவனை உலுக்கிவிட்டது. கைகளைப் புற்றிலே ஊன்றி எழுப்ப முயன்றான். அவனது ஆவேசம் எல்லை கடந்தது. ஆனல்...... ஆனால்...... கால்கள் எழும்ப முயற்சித்

தன... கைகள்... அவையால் ஒன்றுமே செய்ய முடியவில்லை.

மீண்டும் தன்னுயிரைக் காப்பாற்றும் ஆசை. புற்று மறைவிலே கிடந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அருகே ஒரு பெண் தூக்கி வந்து போடப்படுகிறாள். அவள்...... நெற்றியிலே குங்குமம். தமிழ்ப்பெண் தான். இருபத்திநான்கு வயதிருக்கலாம். மூர்ச்சையுற்று கிடக்கிறாள். ஒரு பெரிய கூட்டம் அவளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. அவள் கண் விழித்துப் பார்த்தபோது.. அவளருகே நின்ற ஒரு முரட்டு மிருகம் அவளது ஆடைகளை இழுத்துக் கிழித்துக் களைந்து ஐயோ ...... பிறந்த மேனியுடன் நெருப்பிலே போடப்படப் போகிறாள். மரத்திலே தொங்கவிட்டு நெருப்பிலே எரிய விடப்படப் போகிறாள். தூக்கிக்கொண்டு நெருப்பை நெருக்கி வருகிறார்கள். எரிந்து கொண்டிருந்த தமிழனின் சடலம் இறக்கப்பட்டு விட்டது. அடுத்து அதே இடத்தில் அவள் .... சுந்தரத்தால் பொறுக்க முடியவில்லை......

'' எப்படியும் இவளைக் காப்பாற்றியே தீருவேன்..... என் உயிர் போனபின் தான் இவள் தீயிலிடப்பட வேண்டும். என் இனத்துக்கு என் சமூகத்துக்கு எல்லாவற்றுக்கும் மேலாக என் தாய்க்கு என் தாய்நாட்டுக்கு நான் செய்யும் ஒரே தொண்டாக இது அமையட்டும். ஆவேசம் அவனை எழும்பச் செய்தது.
'' டேய்........ ''

கத்திக்கொண்டே ஓடி வந்தான் திரும்பிய முரடர்கள் அவனைப் பதம் பார்த்தனர். நிலத்திலே கிடந்து துடித்துக் கொண்டிருந்தான். அவர்களிலே ஒருவன்
'' இவனை அடிச்சுக் கொல்ல வேண்டாம். நெருப்பில் போட்டு வதைக்க வேண்டும் ''

என சிங்களத்தில் கூறியது அவனது காதுகளில் விழுந்தது. அவனைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள்.

நெருப்பு கொழுத்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் இடத்தின் அருகில் மூர்ச்சையுற்ற நிலையில் அந்தத் தமிழ்ப் பெண் கிடத்தப்பட்டிருக்கிறாள். இறுதியாக நெருப்பை நெருங்கும் நேரம் ........ அவனது கண்முன்னே அவளது

தாய், தந்தை உடன்பிறப்புக்கள்.... காதலி.. அப்படியே அவன் தவழ்ந்து அலைந்து விளையாடிய யாழ்ப்பாணப் பூமி வந்து போகின்றது. அவனுக்கு இறுதியில் ஒரு மகிழ்ச்சி...... அவன் இறந்தபின் தான் அவள் இறக்கப்போகிறாள் என்பதில் தான்.

நெருப்பை நோக்கி வீசப் போகிறார்களா? அல்லது அவனைப்போல் மரத்திலே கட்டப் போகிறார்களா..... கண்களை இறுக மூடிக்கொண்டே இறப்பதற்குத் தயாரானான்.

கண்விழித்துப்பார்த்தபோது ஒரு ஜீப் வண்டியில் அவனெதிரே அந்தப் பெண் ஒரு சறமும் சேட்டும் அணிந்தபடி இருக்கிறாள். பக்கத்தில் ஒரு தமிழ் உருவம் யாரோ உயர் அதிகாரியோ உயர்ந்த உத்தியோகம் பார்ப்பவரோபோல இருக்கிறது. அவனையறியாமல் அவனது கைகள் அவரை நோக்கிக் கும்பிட முயற்சித்தது. அவனுக்கும் அவளுக்கும் உயிர் கொடுத்த தெய்வர் அவர் தானே!

“ஐயா! நீங்கள் எப்படி...... நான்..... இவர்.....” தடுமாறினான் சுந்தரம்.

“நான் கண்டியிலே வேலை பார்க்கிறன். அங்கயிருந்து பொலிஸ் உதவியோட யாழ்ப்பாணம் போறன் வழியில உன்னைக் கண்டன.........”

அவனுக்கு மிகுதி விளங்கி விட்டது. அவரது கைகளிலிருந்த கைத்துப்பாக்கியையே அவனது கண்கள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் அவனை இறக்கிவிட்டு ஜீப்வண்டி சென்றது. கைகள் கால்கள் உடலெங்கும் கட்டுக்கள் போடப்பட்டன. உணவு வழங்கப்பட்டது. பிறந்த மண்ணுக்கு உற்றார் உறவினர் உயிரோடிருக்கும்போதே அகதி எனப் பெயர் சூட்டப்பட்டு வந்து சேர்ந்த அவலநிலை அவனது மனதைக் குடைந்தது. அங்கு அவனைச் சந்தித்த நண்பன் கூறினான். அவனது சந்திரா கொழும்பிலிருந்து தப்பி வந்துவிட்டாளாம். மகிழ்ச்சியான செய்திதான். ஆனால்...... இந்த நிலையில்........ இருந்தாலும் அவனது ஆவல் அவனைத் தூண்டியது, ஓடோடிச் சென்று அவளைக் கட்டி அணைத்து

" நான் தப்பி வந்துவிட்டேன் "

என்று கூறி அவனது நெற்றியிலே முத்தமிட வேண்டும் போலிருந்தது. உடனேயே புறப்பட்டான். திருநெல்வேலியில் தான் அவனது வீடு இருக்கிறது. அவனையும் அறியாமல் அவனது கால்கள் வேகமாக இயங்கின. முறித்து கைகூட கட்டிய நிலையில் இயங்கிக் கொண்டது. அகதிகள் முகாமின் பலர் தடுக்கவும் நில்லாமல் வந்து கொண்டிருந்தான். கால்கள் வேகமாக இயங்கிக் கொண்டிருந்தன. திடீரென

" அம்மா!......... அம்மா!......... "

என்று அலறியபடியே வயிற்றைப் பிடித்துக்கொண்டு விழுந்தான். வயிற்றின் இருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. அவனது கண்களுக்கு முன்னால் ஓர் சிங்களப் போலீஸ் நாய் பதவி உயர்வு அடையப்போகும் சந்தோஷத்தில் சென்று கொண்டிருந்தது.

துடிதுடித்துக் கொண்டிருந்தான் சுந்தரம். அவனது வாய் எதையோ முணுமுணுத்தது.

" கண்டியில் இருந்து வந்து இத்தனை இன்னல்களுக்கும் தப்பிவந்து யாழ்ப்பாண மண்ணிலா சாகவேண்டும் எனது இருபத்தி ஐந்து வயது இளம் உடல் இப்படிக் கோழைத்தனமாகவா சாகவேண்டும். நூறு சிங்களவர்களைக் கூட கொல்லாமலா நான் சாகிறேன் "

மேலும் அவனால் எதையுமே கூற முடியவில்லை. ரோட்டுக் கரையிலே கிடந்த மண்ணை அவனது வலது கை அள்ளியது. கையை மண்ணோடு கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஏதோ சொல்ல முயன்றான்.

" இதே மண்ணில் நான் மீண்டும் பிறந்து எனது இனத்தின் விடுதலைக்காகப் போராடிச் சாக வேண்டும். இப்போது போல் அடி உதைவாங்கி கோழையாகச் சாகமாட்டேன். " என்றுதான் இறுதியாக நினைத்தானோ?

முற்றும்

## கலை இலக்கியம்பற்றி

எண்ணங்களையும் உணர்வுகளையும் ஒன்றின் பொருட்டுத் தூண்டத்தக்க ஓர் ஊடகமே கலை இலக்கியம் என்பதாகும். இவ்வூடகத்தை கரு, வடிவம் என்று இரண்டாக வேறுபடுத்தலாம். கருவின் சாத்தியப்பாட்டிற்கேற்பவே படைப்பின் முதன்மைத் தன்மை பிறக்கும். வடிவமென்பது தான் சமூகத்தை உந்தத்தக்க படைப்பாளியின் சிருஸ்ட்டித் திறமை என்பதாகும். அதாவது கண் என்னும் கருவை விளக்குவதற்காக கயல்மீன் என்னும் வடிவத்தையே காட்டலாம். அதற்காகக் கண்ணைப் பிதுக்கிக் காட்டுவதல்ல அடிப்படையில் கண்ணென்னும் கருவை விளக்குவது தான் முக்கியமானது. கருவிலிருந்தே படைப்பின் சேவைபற்றிய பிரச்சனை உற்பத்தியாகிறது. வடிவம் எப்பொழுதும் கருவின் தாதியாகவே இயங்கும். இந்த வகையில் ஓர் படைப்பிற் கெதிரான போராட்டத்தில் கருவிற்கெதிரான போராட்டம், வடிவத் தன்மைக்கெதிரான போராட்டம் அல்லது வடிவத்தைப் பிரயோகிப்பதற்கெதிரான போராட்டம் என்பன அடங்கும். நசுக்கப்படுகின்ற சுரண்டப்படுகின்ற மக்களிற்குச் சேவை செய்வதும் அதற்கெதிரானவற்றிற்கெதிராகப் போராடுவதும் தான் கலை இலக்கியத்தின் புனிதப் பணியாகும்.

மு. திருநா.

1. மு. இராஜரட்ணம்

பதுளையை பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ்வளாக விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருட மாணவர் ஆவர். சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்பன எழுதுவதில் மிகவும் ஈடுபாடுள்ளவர். இவரின் ஆக்கங்கள் வானொலியிலும் ஒலித்திருக்கின்றன. தான் வாழும் மலையகத்தின் சூழலிலும் மக்களின் வாழ்க்கையிலும் ஆத்மார்த்தமான ஈடுபாடு உள்ளவர் என்பது இவர் ஆக்கங்களை படிப்போருக்கு தெரிய வரும்.

2. மு. திருநாவுக்கரசு

யாழ் வளாக வரலாற்றுத்துறை மாணவர். இவரின் சிறுகதைகளும், கட்டுரைகளும் வளாகச் சஞ்சிகைகளிலும் ஆண்டு மலர்களிலும் வெளிவந்துள்ளன. இவர் தத்துவக்கல்வியிலும் கணிசமான ஈடுபாடுள்ளவர்.

3. அ. வரதராஜன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கலைப்பீட மாணவர் ஆவர். இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட இவர் அரசியலிலும் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்.

4. வல்வை. ச. பாலசுப்பிரமணியம்

யாழ் வளாக விஞ்ஞானபீட மூன்றாம் ஆண்டு மாணவர். சிறுகதைகள் எழுதுவதில் நான்கு வருடங்களுக்கு மேலான ஈடுபாடுள்ளவர். தான் வாழும் ஊரினதும், சூழல்களினதும் பகைப்புலங்களின் மனிதர்களே பாத்திரங்களாக இவரின் கதைகளில் வருவர்.

5. அகளங்கன்

வவுனியா பம்பைமடுவை பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ் வளாக விஞ்ஞானபீட மூன்றாம் ஆண்டு மாணவர். சிறுகதைகள், மரபுக் கவிதைகள் என்பவற்றில் ஈடுபாடுள்ளவர். தற்போது நாவல் துறையிலும் ஆரம்ப ஈடுபாடு கொண்டிருக்கிறார்.

இக்கதைகள் யாவும் கற்பனையாகும்.

இந்நூலை அச்சிட்டுத் தந்த சிவகௌரி அச்சகத்திற்கும், கடனுதவி செய்த யாழ்வளாக இலக்கிய மன்றத்திற்கும் இன்னும் பல வழிகளிலும் எமக்குதவியிருக்கும் அன்பர்களுக்கும் எங்கள் ஐவரின் நன்றியும் உரியதாகும்.